Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்),
யாழ்ப்பாணம்.



- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சி/2494)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 01 (20.06.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:262

## கருணாவைப் பயன்படுத்தி புலிகள் மீது

# போரைத் தொடங்க முயற்சித்தால்

# பாரதூரமான விளைவுகள் ஏற்படும்!

## கேணல் ரமேஷ் அரசுக்கு எச்சரிக்கை



(மட்டக்களப்பு)

**கருணாவுக்குப் புகலிடம் அளித்து பாதுகாத்து வரும் அரசபடையினர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு அவரைப் பயன்படுத்த முனைந்து வருவதாகவும்,**

**கருணாவைப் பயன்படுத்தி புலிகளுக்கு எதிராக மீண்டும் போரைத் தொடங்க அரசாங்கம் முயற்சித்தால் பாரதூரமான விளைவுகளை எதிர் கொள்ள நேரிடும் எனவும் - இத்தகையதொரு சூழ்நிலையில் தகுந்த நடவடிக்கை எடுக்க நாம் தயங்கமாட்டோம் என்றும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலையில் உள்ள தேனகம் விருந்தினர் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே கேணல் ரமேஷ் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

இராணுவப் பிரிவு மற்றும் அரசியற்பிரிவைச் சேர்ந்த நான்கு சிரேஷ்ட பெண் புலிகள் கருணா குழுவில் இருந்து இந்த வாரம் விடுதலைப் புலிகளுடன் இணைந்துள்ளனர்.

இந்த நான்கு பெண் போராளிகளும் கருணாவின் நடவடிக்கைகள் குறித்து விரைவில் வெளிப் படுத்தவுள்ளனர். இவர்கள் விரைவில் செய்தியாளர்களைச் சந்தித்து இந்த இரகசியங்களை வெளியிடுவர்.

தெற்கிலுள்ள சிங்கள ஊடகங்கள் மற்றும் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களின் சிங்களச் செய்தியாளர்கள் அண்மையில் புலிகள் தொடர்பான தவறான தகவல்களை கொடுத்தனர்.

அமைதி நிலவிக்கொண்டிருக்கின்ற தருணத்தில் இவர்கள் மோதல் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக செய்திகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

சமாதான முயற்சிகள் முன்னெ

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பறக்கவிட்ட

## வெண்புறா இறந்து வீழ்ந்தமைக்கு அரசியல் சதி பின்னணிக் காரணமா?

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரம நாயக்கவால் குக்குலேகங்க பயிற்சி நிலையத்தில் பறக்க விடப்பட்ட வெண்புறா இறந்து வீழ்ந்ததன் பின்னணியில் அரசியற்சதி காரணமாக இருக்கலாம் என்று ஆளும் கட்சி சந்தேகம் வெளியிட்டுள்ளது.



பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கவால் அண்மையில குக்குலேகங்க இராணுவப் பயிற்சி முகாமில் பறக்கவிடப்பட்ட சமாதானப் புறா இறந்து எவ்வாறு விழுந்தது என்பதனைக் கண்டுபிடிக்க முடியாமலிருப்பது இராணுவத்தரப்பிற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

சமாதானப் புறா சோர்வுற்ற நிலையில் இருந்ததாலேயே அது பறக்க விட்டவுடன் இறந்ததாக இந்த இராணுவப் பயிற்சி முகாமில் நடந்த நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் புறா உயிரிழந்ததற்குப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க போர்க் கப்பல் அடுத்த வாரம் கையளிப்பு

(கொழும்பு)

'கரேஜஸ்' என்ற அமெரிக்க கரையோர ரோந்துக் கப்பலை இலங் கைக் கடற்படையினருக்கு கைய

# விமானப்படைக்கு புதிய விமானங்கள்; இரண்டு மாதங்களுக்குள் கொள்வனவு!

## அகதிகள் தினமான இன்று கிளிநொச்சியில் பேரணி!

(கிளிநொச்சி)

இடைக்கால தன்னாட்சி அதி கார சபையை விடுதலைப் புலிகளி

## அமெரிக்க ரோந்து கப்பல் அடுத்த வாரம் கையளிப்பு

(கொழும்பு)

'கரேஜஸ்' என்ற அமெரிக்க கரையோர ரோந்துக் கப்பலை இலங்கைக் கடற்படையினருக்கு கையளிப்பதற்கான உடன்படிக்கை அடுத்த வாரம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்தக் கப்பலை பொறுப்பேற்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தலைமையிலான கடற்படை அதிகாரிகள குழு அமெரிக்காவிற்கு செல்ல உள்ளது.

சுமார் ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான இந்தக் கப்பல் இலங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விமானப்படைக்கு புதிய விமானங்கள்; இரண்டு மாதங்களுக்குள் கொள்வனவு!

## அரசு அங்கீகாரம் வழங்கியது

(கொழும்பு)

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் விமானப்படைக்கு புதிய போர்ப் பயிற்சி மற்றும் போக்குவரத்து விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டு-விமானப்படையின் பலம் வலுப்படுத்தப்படும் என்று விமானப் படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

தியததலாவவில் உள்ள விமானப் படைப்பயிற்சி நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே, விமானப் படைத் தளபதி இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து தகவல் வெளியிடுகையில் -

கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீது 2001ஆம் ஆண்டு ஜுலை 25 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் விமானப்படைக்குச் சொந்தமான கே-8 ரகத்தைச் சேர்ந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் தினமான இன்று கிளிநொச்சியில் பேரணி!

(கிளிநொச்சி)

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகளிடம் வழங்குவதன் மூலமே இயல்பு நிலையை ஏற்படுத்த முடியும் என்றும், வடக்கு - கிழக்கில் இயல்பு நிலை ஏற்படாத போதிலும் நிவாரண விநியோகத்தை இடைநிறுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையை கண்டித்தும் சர்வதேச அகதிகள் தினமான இன்று கிளிநொச்சி நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

பரந்தன் பிரதேச எழுச்சிப் பேரவையும், வெகுஜன அமைப்புக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மூழ்கிய படகிலிருந்த ஒருவர் தப்பி வந்தார்!

## பலர் உயிரிழந்திருக்கலாமென அச்சம்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகள் 25 பேரை ஏற்றிவந்த வள்ளம் ஒன்று கடும் கடற்கொந்தளிப்பு காரணமாக கடலில் மூழ்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் நோக்கி கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் வந்த வள்ளமே கடற்கொந்தளிப்பு காரணமாக கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மூழ்கிய வள்ளத்திலிருந்து ஒருவர் நீந்தி நேற்று மன்னார் கரையை வந்தடைந்துள்ளார்.

இதேவேளை - மூழ்கிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு எந்த ஆபத்தும் இல்லையாம்!

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு எந்த வகையிலும் ஆபத்து ஏற்படவில்லை என்று பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிராண்ட்பாஸ் பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட குண்டு பொருத்திய அங்கி தொடர்பாக விசாரணை

(12 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த வாரம் லண்டனுக்கு சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா, பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜக் ஸ்ரோவைச் சந்தித்து உரையாடுகின்றார்.




வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

இலங்கை வங்கி ரண் சுரெக்கும் கடன் சேவை

தந்தையர் தினமான இன்று எமது நல்வாழ்த்துக்கள்

அதிக பணம் எங்களிடமிருந்து
குறைந்த வட்டியும் எங்களிடமிருந்தே!




24 கரட் தங்கப்பவுண் ஒன்றுக்கு,
அதிக தொகை

ரூபா. 9,000/=

மாதாந்த வட்டி நூற்றுக்கு 1.25 மட்டும்.
அவசரத்திற்கு, விரைவாக, குறைந்த வட்டியில் அதிக தொகைப் பணத்தைப் பெற்றுத்தரும் உன்னத சேவை! இலங்கை வங்கியின் ரண் சுரெக்கும் அடகுச் சேவை

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி
(சி/2675)



தந்தையர்தின நல்வாழ்த்துக்கள்

மக்கள் வங்கியில் நடைமுறையில் உள்ள ஓய்வூதியர்களை உள்ளடக்கியதான அனைத்து மூத்த பிரஜைகளுக்கான "பாரிநாத" கணக்குகளை ஆரம்பித்து விசேட வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. நிலையான வைப்பு - குறைந்த வைப்புத் தொகை 100,000/-
   - காலம் 24 மாதம்
   - வட்டி வீதம் 8%
   - மாத வட்டி 7.25%
2. சேமிப்புக் கணக்கு - குறைந்த வைப்புத் தொகை 5,000/-
   - குறைந்த வட்டி வீதம் 5%
   - தொடர்ந்து 6 மாதங்கள் இக்கணக்கினை வைத்திருப்பவர்களுக்கு 6% வட்டி வழங்கப்படும்.
3. 6 மாதங்கள் தொடர்ந்து நிலையான வைப்பினை வைத்திருப்பவர்களுக்கு 3 மாதங்களுக்கு ஒரு தடவை வைத்தியரின் ஆலோசனை பெறுவதற்கான வசதி.
4. "பீபிள்ஸ் டிரவல்ஸ் லிமிரெட்" ஊடாக பிரயாண ஒழுங்குகளைச் செய்பவர்களுக்கு பிரயாணச் செலவில் 5% கழிவு.
5. வைப்புகளுக்கெதிரான கடன் வசதிகள்.
6. தொழில்சார் நிபுணர்கள் தம் தொழிலை வர்த்தகரீதியாக, புதிதாகத் தொடங்கவோ அல்லது மேம்படுத்தவோ கடன் திட்டங்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் விபரங்களை அண்மையிலுள்ள மக்கள் வங்கியை அணுகி அறிந்து கொள்ளுங்கள்.

மக்கள் வங்கி
பிராந்திய தலைமை அலுவலகம்
யாழ்ப்பாணம்.

மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி
(சி/2676)



இன்று தந்தையர் தினத்தில்
எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்

தெல்லிப்பளை. ப. நோ. கூ. சங்கம்

தலைவர்
பொது முகாமையாளர், பணிப்பாளர், பணியாளர்கள்.
(சி/2674)

# நாடாளுமன்றில் ஜனநாயகத்தை பேணுமாறு எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்குக் கடிதம்!

## நாளை கையளிக்கப்படும்

நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துமாறு கோரி, எதிர்க்கட்சிகள் நாளை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டாரவிடம் கடிதமொன்றைக் கையளிக்கவுள்ளன.

தற்போது எதிர்க்கட்சிகள் வரிசையில் 114 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். மிகுதி நால்வர் கையெழுத் திடவுள்ளனர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதமே சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை, தற்போதைய அரசாங்கத்தை ஆறுமாத காலத்துககுள் பதவியிலிருந்து வெளியேற்ற மாட்டோமென ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் தெரிவித்திருந்தது.

ஆனால், அரசாங்கததை உடனடியாக கையேற்குமாறு வர்த்தக சமூகம், மற்றும் அரசியல் ஆலோசகர் சபை என்பன இணைந்து ஐக்கிய தேசியக்கட்சிக்கு அழுத்தமொன்றைக் கொடுததுள்ளது.

ஏனெனில், தற்போதைய சிறுபான்மை அரசாங்கம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலிலும் தனது பெரும்பான்மையை நிரூபிக்கவில்லை.

அடுத்த நாடாளுமன்ற கூட்டத் தொடரிலும், பெரும்பான்மையை நிரூபிக்கவில்லை.

அடுத்த நாடாளு மன்றக் கூட்டத் தொடரிலும் பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறும்.

இதனால் அரசாங்கத்தை உடனடியாகக் கலைப்பதற்கான சந்தர்ப்பமே உள்ளது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் ஐக்கிய தேசியக் கட்சி தவறவிடக் கூடாது என அந்த வர்த்தக மற்றும் ஆலோசகர் சபை அறிவுறுத்தியுள்ளது. (01)

## சாரணர்களுக்கான புதிய வேலைத்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கை சாரணர் சங்கம் வேலை வாரத்துக்குப் பதிலாக இந்த முறை 'சாரணர் சேவையும் உறவும்' என்னும் பொருளில் புதிய வேலைத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

நேற்று ஆரம்பமான இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைமுறைப்படுத்தப் படும்.

இந்தக் காலப்பகுதியில் வீடுகளுக்கு வரும் சாரணர்களுக்கு வேலைக்குப் பதிலான அன்பளிப்புக்கள் வழங்குவதன் மூலம், சாரணர் வளர்ச்சிக்கு சமுதாயத் தவரால் பங்களிப்புச் செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# திலங்க சுமதிபால பிணையில் விடுதலை

(கொழும்பு)

திலங்க சுமதிபாலவை மேன் முறையீட்டு நீதிமன்றம் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரொக்கப் பிணையிலும் மற்றும் மூன்று ஆட் பிணையிலும் நேற்றுமுன்தினம் விடுவித்துள்ளது.

அதில் அவரது கடவுச்சீட்டை தடுத்து வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவர் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை சி.ஐ.டியின் முன் ஆஜராக வேண்டுமென்று நீதிமன்றத்தால் பணிககப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிவான் கே.சிறிபவன் தீர்ப்பை வழங்குகையில் -

குடிவரவு குடியகழ்வு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவருக்கு பிணை வழங்குவது சட்டத்துக்கு முரணானது.

அதில் அவசியமாக சுமதிபாலவைத் தடுத்து வைப்பது நியாயமறறது என்பதால், நீதிமன்றம் அவரை பிணையில் விடுவிக்க தீர்மானித்திருப்பதாகக் கூறினார்.

நீதிவான் சிறிபவன் தெரிவித்த கருத்துக்களை நீதிபதிகள் குழுவின் தலைவர் நீதியரசர் அன்பு சோமவன்சவும், நீதியரசர் காமினி அபயரத்னவும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தனர்.

## பல்கலைக்கழகங்களின்

# கல்விசாரா ஊழியர்களுக்கு விசேடபடி வழங்க முடிவு!

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கல்விசாரா ஊழியர்களுக்கு விசேட படி வழங்குவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கல்விசார் ஊழியர்களுக்கும், கலவிசாரா ஊழியர்களுக்கும் இடையிலே சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்காக கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. திறைசேரிச் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியக் குழு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் சந்திப்பிலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சகல பல்கலைக்கழகங்களிலும், கல்வித்துறை, தொழிநுட்பத்துறை ஊழியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படுமென்றும் திறைசேரி இதற்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும் இந்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

## அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

# மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் அரசாங்கம் நிரூபித்துக் காட்டட்டும்

## ராஜித சேனாரத்ன சவால்

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசினால் முடியாதெனவும், அவ்வாறு அரசாங்கத்தினால் இயலுமெனில், மாகாண சபைத் தேர்தலுக்கு முன் அதனை நிரூபிக்க வேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டு ஒரு அங்குலமேனும் முன்னே செலல முடியாத கூட்டமைப்பு அரசின் கீழ் எவ்விதத்திலேனும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படமாட்டாது.

பொதுத் தேர்தலின்போது கூட்டமைப்பின் தலைவர்கள் வாக்குறுதி அளித்தபடி அரச ஊழியர்களுக்கு நூற்றுக்கு எழுபது வீதம் வேதன அதிகரிப்பு வழங்கப்படுமென்றால், அதனை மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்னர் செயற்படுத்த வேண்டுமென அரசுக்கு சவால் விடுகின்றேன் என்று ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார்.



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் நடத்திய வைகாசிப் பெருவிழாவில் முன்னாள், திருகோணமலை அரச அதிபர் வ.வேலும்மயிலும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் (17)

## அரசுக்கு எதிராக

# நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரும் எண்ணம் இல்லை

## எல்லாவல மேதானந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரும் நோக்கம் தமக்குக் கிடையாது என ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தொிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது, தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாககப்பட்டதாகத் தெரிவித்துள்ள தேரர் - தாக்கிய அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தண்டிக்கப்போவதில்லை.

ஜனாதிபதியோ அல்லது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவோ இது தொடர்பாக - மன்னிப்புக் கோரியிருக்கலாம்

இத்தகைய சம்பவங்கள் மேலும் தொடராத வகையில் தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும் எனவும் இந்தக் கடிதத்தில் கோரியுள்ளார்.

ஜனாதிபதிக்குக்கு அனுப்பி வைத்துள்ள இந்தக்கடிதத்தின் பிரதியொன்றை எல்லாவல மேதானந்த தேரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அனுப்பி வைத்தார்.

# கலைஞர்கள் சமூகப்பொறுப்பிலிருந்து எப்போதும் விலகிவிட முடியாது

## திருமலையில் புதுவை இரத்தினதுரை

கலைஞர்களுக்கு சமூக அந்தஸ்து கொடுககப்படவில்லை. பிரமுகர்கள் வாழும்போதும், வாழ்ந்தும் செத்த பின்பும் வாழ்கின்றார்கள். ஆனால், கலைஞர்கள் அவ்வாறில்லை. வாழும்போது இறந்து செத்த பின்பு வாழ்பவர்கள் கலைஞர்கள். நாம் கலைஞர்களாக இறுமாப்புடன் இல்லாதிருப்பதே சமூக அந்தஸ்து இல்லாது இருப்பதற்குக் காரணம். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

திருகோணமலையில் கலை இலக்கிய செயற்பாடுகளை மீளவும் கட்டியெழுப்ப, புதிய பயணம் ஒன்றை ஆரம்பிப்போம் என்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கலை இலக்கிய செயற்பாட்டின் ஆலோசனைக் கலப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை நியூ சில்வெர் ஸ்டார் விடுதியில் மாவட்ட அரசியற பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சட்டத்தரணி கா.சிவபாலன், திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை அங்கு உரையாற்றுகையில் - ஒரு இனம் ஆளப்படும்போதே அழகு பெறும். இன்று எமது கலைகள் அருகிக் கொண்டு வருகின்றது. நல்ல கலைகளை நாங்கள் மறந்து வருகின்றோம். வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் நாதஸ்வரக் கலைஞர்கள் 40 பேரே வாழ்ந்து வருகின்றனர்.

இன்னும் 10 வருடத்தில் இதை வாசிப்பதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். என்றெண்ணத் தோன்றுகின்றது. இவவாறு பல நல்ல கலைகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாங்கள் விரும்பும் ஒன்று விரைவில் கிடைக்கத்தான் போகின்றது. அது போராக இருக்கலாம், அல்லது பேச்சுவார்ததையாக இருக்கலாம். பெரும் பான்மையினர் தநதால் வாங்குவது ஈழம், அவர்கள் தர மறுத்தால் நாஙகள் பெற்றுக்கொள்வது தமிழீழம் என்றார்.

கலைஞர்களால் முடியாதது எதுவும் இல்லை. அர்ப்பணிப்பு அறிவுபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் சிந்திப்பவர்கள் கலைஞர்கள். கலைகளை வளர்த்து எடுக்க வேண்டிய தேவையிருக்கிறது. தொலைக்காட்சிகளின் இன்றைய பொழுதுபோக்குகளின் காரணமாக எமது சிநதனைத் திறன்கள் மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மாற்று மனோநிலையில் நாங்கள் வளர்ந்து கொண்டிருக்கிறோம். வாழ்வுகள் வீணாகிப் போகினறது. எம்மிடையே தொடர்பற்றுப்போகும் நிலை உருவாகப்போகின்றது.

பேசவேண்டிய தேவை வந்து விட்டது. நாங்கள் பேசியே ஆகவேண்டும். புதுவிதி செய்யவேண்டும். அதறகான தேவை இருக்கின்றது. தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியினைச் சிதைப்பதற்காக திட்டமிட்டு கற்கும் நேரத்தில் தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்வுகள் ஒளிபரப்படுகின்றன. கலைகளுக்காக ஏதாவது செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது.

இன்று கலைஞர்கள் களம் இல்லாது புறக்கணிக்கப்படவில்லை. ஈழத் தமிழர்களுக்கு வாழ்வு வரத் தொடங்கிவிட்டது. நாம் அழுதகாலம் போய்விட்டது. கலைஞர்களுக்கு சமூகப்பணி இருக்கின்றது. அதிலிருந்து நாங்கள் வழுவ முடியாது எனத் தெரிவித்தார். (04)

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில்

# பொலிஸாரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த ஜே.வி.பி. ஆதரவு மாணவர்கள் எதிர்ப்பு

பொலிஸாரை ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வளாகத்துக்குள் பணியில் ஈடுபடுத்துவ தென எடுக்கப்பட்ட முடிவுக்கு ஜே.வி.பி. ஆதரவு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒருவர் அண்மையில் சக மாணவர்களால் படுகொலை செய்யப்பட்டமையை அடுத்து, அதிகரித்து வரும் இத்தகைய வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், பல்கலைக்கழக வளாகத்துக்குள் பொலிஸாரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவதென பல்கலைக்கழகத்தின் உயர் பீடத்தால் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

இது குறித்து ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக மாணவத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், பல்கலைக்கழக வளாகத்துக்குள் பொலிஸாரை அனுமதிப்பது தொடர்பாக ஜே.வி.பியின் ஆதரவு, மாணவர்கள் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்போதைக்கு தேவைப்படுவது அவர்களின் நலன்கள் தொடர்பான கரிசனையேயன்றி, பொலிஸாரின் பாதுகாப்பு அல்ல எனவும் அவர்கள் தெரிவிததனர்.

# காலிறுதி போட்டிக்குள் நுழையும் வாய்ப்பை இழந்தது பல்கேரியா!





ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன் போட்டியில் டென்மார்க் அணி 2:1 என்ற கோல் கணக்கில் பல்கேரியாவை வீழ்த்தியதால் பல்கேரிய அணி காலிறுதிப போட்டிக்குச் செல்லும் வாய்ப்பை இழந்தது.

போர்த்துக்கலில் நடைபெற்று வரும் ஐரோப்பிய உதைபந்தாட்ட சாம்பியன் போட்டியில் 'சி' பிரிவில நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் டென்மார்க்கும், போர்த்துக்கலும் மோதின. இதில் 2:0 என்ற கோல் கணக்கில் டென்மார்க் அணி வெற்றிபெற்றது. முதல் பாதியின் கடைசி நிமிடத்திலும், இரண்டாவது நிமிடத்திலும் கோல் அடித்து டென்மார்க் வென்றது.

44 ஆவது நிமிடத்தில் ஜோனடால் தோமசனும், 90 ஆவது நிமிடத்தில் மாற்றுவீரராகக் களம் இறங்கிய ஜெஸ்பார் குரோங்க்ஜேரும் டென்மார்க் அணிக்காக கோல் அடித்தனர். முதல் போட்டியில் சுவீடனிடம் 5:0 என்ற கோல் கணக்கில் பல்கேரியா தோற்று இருந்தது. இந்த நிலையில் டென்மார்க் அணிக்கு எதிரான இப்போடடியிலும் தோற்றதால் தொடர்ந்து இரண்டு தோல்விகளை பெற்று காலிறுதி வாய்ப்பை பல்கேரியா இழந்தது.

இந்தப் போட்டியில் டென்மார்க் அணிக்குச் சவாலாக பல்கேரியா- ஆட்டத்தின் எந்த ஒரு நிலையிலும் விளையாடவில்லை. மாறாக இரண்டாவது பாதியில் பல்கேரிய அணி வீரர்கள் 7 பேருக்கு மஞ்சள் அட்டை காணபிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டது. பல்கேரிய கப்டன் ஸ்டிலிய பெட்ரோவ் ஆட்டம் முடிய 7 நிமிடம் இருந்தபோது சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். முதல் பாதி ஆட்டத்தில் டென்மார்க்கின் ஆதிக்கம் நிலவினாலும் கோல் அடிக்கமுடியாமல் திணறியது.

இந்த நிலையில் முதல் பாதியின் கடைசிக்கட்டத்தில் கோல் அடித்து முன்நிலை பெற்றது டென்மார்க். மிட்-பீட்டர் தோமஸ் கிரேவ்செந் அருமையாக பாஸ் செய்து பந்தை, மார்ட்டின் ஜோயர்கென்சன் பல்கேரிய கோல் கீப்பருக்கு முன்னால் வரும்படி தட்டி விட்டார்.

இந்தப் பந்தை தொமசன் எளிதாக கோல் வலைக்குள் தட்டினார். இதனால் 1:0 என்ற முன்னிலையை டென்மார்க் பெற்றது. முதல் 45 நிமிடங்களில் பல்கேரியாவின் கோல் பகுதியை முற்றுகையிட்டு டென்மார்க் அணிவீரர்கள் தொடர்ந்து தாக்கினர். இருப்பினும் பல்கேரிய அணி தாக்குப் பிடித்து விளையாடியது.

முதல் பாதியில் டென்மார்க் அணிக்கு கோல் அடிக்க நிறைய வாய்ப்புக்கள் கிடைத்தன. இவை அனைத்தும் வீணடிக்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இத்தாலிக்கு எதிரான போட்டியில் விளையாடாத குரோங்க்ஜேர், பல்கேரிய அணிக்கு எதிரான போட்டியில் விளையாடினார். இவர் டென்மார்க் அணியில் டென்னிஸ் ரொம்மி டாலுக்குப் பதிலாக 23 ஆவது நிமிடத்தில் களமிறங்கினார்.

43 ஆவது நிமிடத்தில் பல்கேரியருக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. மார்ட்டின் பெட்ரோவ் தவறாகக் கணித்து அடித்த ஷொட் டென்மார்க் கோல் கீப்பர் சகோரன்கனின் கையில் தஞ்சம் புகுந்தது. அடுத்த நிமிடத்தில் டென்மார்க் ஒரு கோல் அடித்து முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் எவ்வளவு முயன்றும் பலன் கிடைக்கவில்லை. இந்த நிலையில் கடைசி நிமிடத்தில் 100 மீற்றர் தொலைவில் நின்று குரோங்கஜேர் அடித்த தாழ்வான ஷாட் லேசாக மாறியது. இந்த நிமிடத்திலேயே கிரேவன்சன் அடித்த ஷாட் கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியது.

இதனால் 2:0 என்ற கோல் கணக்கில் டென்மார்க் வெற்றிபெற்றது. டென்மார்க்அணி தனது முதல் போட்டியில் இத்தாலியை எதிர்கொண்டது. இந்தப் போட்டி கோல் ஏதும் இன்றி சமநிலையில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே சுவீடனிடம் தோல்வி கண்ட பல்கேரியா, இப்போட்டியிலும் தோல்வி கண்டதால் கால் இறுதிக்குள் நுழையும் வாய்ப்பை இழந்தது. இதேவேளை, டென்மாரக் அணி ஏற்கனவே ஒரு புள்ளியுடன் இருந்தது. இந்த வெற்றியின் மூலம் மொத்தம் 4 புள்ளிகளைப் பெற்றது. இந்தப் போட்டியைக் காண்பதற்கு 30 ஆயிரம் ரசிகர்கள் கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுவீடனுடனான போட்டி சமநிலையில்; நெருக்கடிக்குள் இத்தாலி அணியினர்!



ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், 'சி' பிரிவின் இன்னொரு லீக் ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் இத்தாலி - சுவீடன் அணிகள் மோதின.

இரண்டு அணிகளுமே பலம் வாய்ந்தவை என்பதால், ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இந்தப் போட்டியைக் காண சுமார் 45 ஆயிரம் ரசிகர்கள் அரங்கில் கூடியிருந்தனர்.

இரண்டு அணி வீரர்களுமே கடுமையாகப் போராடிக்கொண்டிருந்த நிலையில், ஆட்டம் ஆரம்பித்து 37 ஆவது நிமிடத்தில் இத்தாலிக்கு முதலாவது கோல் அடிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

இத்தாலி வீரர் அனடோனியோ கஸோலோ இந்தக் கோலை அடித்தார். பதிலுக்கு கோல் அடிப்பதற்கு சுவீடன அணிக்கு வாய்ப்புக் கிடைத்தது.

UEFA Euro 2004 PORTUGAL

ஆனால், சுவீடன் அணியினர் இந்த வாய்ப்பை நழுவவிட்டதால், முதல்பாதி ஆட்டத்தில் இத்தாலி அணி 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலத்துடன் விளையாடிக் கொண்டிருந்ததால், சுவீடன் அணி, தோல்வி பெறும் என்று கருதப்பட்டது.

ஆனால், யாரும் எதிர்பாராத வகையில், ஆட்டம் இறுதிநேரத்தை நெருங்கிக்கொண்டிருந்தபோது - சுவீடன அணி பதில் கோல் ஒன்றை




8 ஆவது நிமிடத்தில் அடித்துச் சமப்படுத்தியது. சுவீடன் வீரர் ஜிலாதன் இப்ராஜி மோவில் இந்தக் கோலை அடித்தார். இதன்பின்னர் இத்தாலி அணியினரால் கோல் எதையும் அடிக்க முடியாமல் போய்விட, போட்டி சமநிலையில் முடிவுற்றது.

இந்தப் போட்டி சமநிலையில் முடிவுற்றதால், இத்தாலி அணி காலிறுதிப் போட்டியிலிருந்து வெளியேறும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இத்தாலி விளையாடிய இரண்டு லீக் போட்டிகளும் சமநிலையில் முடிந்ததால், இந்த அணிக்கு 2 புள்ளிகள் கிடைத்துள்ளன.

இத்தாலி அணி எதிர்வரும் 22 ஆம் திகதி பல்கேரியாவை எதிர்கொள்ளவுள்ளது. இதில் வெற்றி பெற்றால் காலிறுதிப் போட்டிக்குள் இத்தாலி நுழையும்.


## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் (கோப்பாய் தெற்கு) மகள் வயது 29 BA.Special பட்டதாரி - உயரம் 5'- 6'', பூசம் 2ம் பாதம் 4 இல் தோஷமற்ற செவ்வாய், இராசி கடகம், பொருத்தமான வயது, நற்பண்புகள் உடைய மணமகனின் பெற்றோர் அல்லது அக்கறையுடைய உறவினர் அவரது சாதகக் குறிப்பின் பிரதான விடயங்களை உள்ளடக்கிய நிழற்பிரதி (Photostat) யுடன் மணமகனின் சுயவிபரம், அவரது குடும்பம் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். பல்கலைக் கழகப் பட்டதாரி, அரச திணைக்கள நிர்வாகத்துறை அலுவலர், ஆசிரியர் விரும்பத்தக்கது. சீதனம் உண்டு.

விண்ணப்பம் : மே/பா. நமது ஈழநாடு இல.30. (764)

## மணமகள் தேவை

அவுஸ்ரேலியாவிலிருந்து அண்மையில் வரவிருக்கும் நற்குணமுள்ள யாழ்.இந்து கௌரவ சுவாதி நட்சத்திர மணமகனுக்கு 35 வயதுக்குட்பட்ட அழகிய, குடும்பப் பாங்கான மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.

ஜே.நவரட்ணம், தொலைபேசி இலக்கம் 0776253974

திறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், தேவயாணி நடித்த
வல்லரசு
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு 8.45 (பு.நே) General daughter
(சி-2621)

ராஜா யாழ்ப்பாணம்.
விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த



அருள்
காட்சிநேரம்:-10.30,2.30,6.30மட்டும் (பு.நே)
(சி-2623)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
கில்லி (கில்ஸ்)



22 வரை மட்டும்
தினசரி காட்சிகள் : 11.00. 3.00. 7.00 (பு.நே)
(சி-2622)

YOGI HOME SCIENCE ACADEMY

CAKE EXHIBITION

கேக் கண்காட்சி சம்பந்தமான கலந்துரையாடல் 27.06.2004 பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் பயிற்சியை முடித்த அனைத்து மாணவிகளையும் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

T.P : 222 2796

ஆசிரியை,
75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி/2678)

## முக்கிய அறிவித்தல்

### பதிவுகளை உடன் மேற்கொள்க

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட சகல தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் (10 பேருக்கு மேல்) கணினிக் கற்கை நிறுவனங்கள் அனைத்தும் 30.06.2004 ற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறிப்பு : 30.06.2004 ற்கு முன்னர் பதிவு செய்யப்படாத கல்வி நிறுவனங்கள் தொடர்ந்து நடைபெற அனுமதி மறுக்கப்படும்.

விசேட கருமபீடம்,
சயன்ஸ் கோல்,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (765)

செயலாளர்,
யாழ்ப்பாணம் - நல்லூர்,
தனியார் கல்வி நிலைய ஒன்றியம்.

## சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோவில் 7 ஆம் திருவிழா உற்சவம்




காக்க காக்க
கனகவேல் காக்க
நோக்க நோக்க
நொடியில் நோக்க
தாக்க தாக்க
தடையறத் தாக்க

இன்று மாலை ஆறுமுகப் பெருமான் புனராவர்த்தனம் செய்யப்பட்ட கைலாச வாகனத்தில் வீதி உலா வருவார்.

7ஆம் திருவிழா உபயகாரர்
மயிலணி - சுன்னாகம்.

(சி/2681)

# சர்வதேச தினங்களை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே போட்டிகள்

(ஆழியவளை)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம் போரூட் "ஒளி" நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு இடையே சர்வதேச தினங்கள் தொடர்பில் போட்டிகளை நடாத்தவுள்ளது.

போட்டிகள் பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, இடை நிலைப் பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

இந்தப் போட்டிகள் குறிப்பிட்ட தினங்களில் பிற்பகல் 3 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதுவிடயமான சுற்று நிருபங்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராஜேந்திரன் தெரிவித்தார்.

கட்டுரை, சுவரொட்டிச் சித்திரம், பேச்சு, பாடல், பொது அறிவு, கவிதையாக்கம், நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஜுன் மாதம் சர்வதேச சுற்றாடல் தினம் தொடர்பான போட்டிகள் ஜுலை 5ஆம் திகதியும், சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு சம்பந்தமான போட்டிகள் ஜுலை 26ஆம் திகதியும், சர்வதேச நல்லொழுக்க தினம் சம்பந்தமான போட்டிகள் செப்ரெம்பர் 27ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. (122)

# அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நடாத்தும், அரச ஊழியர்களுக்கான ஆக்கங்கள் பற்றிய போட்டித் தொடர் -2004ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் அரச அலுவலர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி பற்றிய நிபந்தனைகளும், விண்ணப்பப்படிவமும் சகல அரச அலுவலகங்களுக்கும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சிறுகதை, கவிதை, இலக்கியக் கட்டுரை, சிறுவர்கதைகள் கொண்ட இந்தப் போட்டிக்கான ஆக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு உரிய இறுதித் திகதி யூலை 10ஆம் திகதியாகும்.

ஆர்வமுடைய அலுவலர்கள் தத்தமது சுயமான ஆக்கங்களை திணைக்களத் தலைவரது விதப்புரையுடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் அந்தந்தப் பிரதேச கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளும்படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.(24)

**யாழ். பல்கலை ஊழியர் சங்கத்தினர்**

# வேலை நிறுத்தம் குறித்து களனி பல்கலையில் கூட்டம்

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான வேலை நிறுத்த போராட்டம் தொடர்பாகவும், அவர்களின் ஐந்து அம்சக்கோரிக்கை தொடர்பாகவும் இலங்கைப் பல்கலைக்கழக ஊழியர் சங்க சம்மேளனம் கூடி ஆராயவுள்ளது.

இந்த கலந்துரையாடல் எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை களனிப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில் இலங்கையிலுள்ள பல்கலைக்கழக ஊழியர் சங்கத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் முன்வைத்து இருக்கும் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனம், சம்பளப்படி, துணை வேந்தர் விடுதி தனியார் மயமாக்கல், விமான பயணச்சீட்டுச் செலவு, சீருடை, ஊழியர்களுக்கான கடமை நேரம் என்பவற்றுக்கு தனியாக, முழுமையாக விளக்கம் அளிக்க வேண்டும் என கேட்டுள்ளமை குறித்து, இந்த கலந்துரையாடலில் விரிவாக ஆராயவுள்ளனர்.

இதன் பின்னரே யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் அடுத்த கட்ட செயற்பாட்டுக்கான முடிவு, எடுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வடமராட்சி கிழக்கில்**

# துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மூன்று வீதிகள் புனரமைக்கப்படும்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஜி.ரி.இசற். நிறுவனத்தினரின் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மூன்று வீதிகள் இனம் காணப்பட்டு, 12 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களை இனம் காணுதல் சம்பந்தமான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில், உதவி அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. கிராம அலுவலகங்களும் ஜி.ரி.இசற். நிறுவன அதிகாரிகளும் கலந்துகொண்டு திட்டங்களை இனங்கண்டு முன்னுரிமைப்படுத்தி, இந்த முடிவுளை எடுத்தனர்.

இதன் பிரகாரம் வடமராட்சி கிழக்குப் பிரதேசம் - இரண்டு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, செம்பியன்பற்று தெற்கு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான, வலயம் ஒன்றுப் பகுதியில் கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான 15கிலோ மீற்றர் வீதியும் செம்பியன்பற்று வடக்கு தொடக்கம் மணற்காடு வரையான வலயம் இரண்டில் அம்பன் மாளிகைத்திடல் வீதி பொற்பதி, கடற்கரை வீதி என்பனவும் புனரமைப்புச் செய்வதாக முடிவு எடுக்கப்பட்டது.

இதன் பிரகாரம் வலயம் I இற்கு 6 இலட்சம் லட்சம் ரூபாவும் II இற்கு 6 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. (122)

# நெடுந்தீவு படகு சேவை சீரின்மையால் மருந்து விசிறும் பணி இடைநிறுத்தம்

நெடுந்தீவு மக்களுக்கு பெருந் தொல்லை கொடுத்துவந்த மண் இலையான்களை கட்டுப்படுத்தும் நோக்கில், அதற்கான மருந்து விசுறும் நடவடிக்கை நெடுந்தீவுப் படகு போக்குவரத்து சீரின்மையால் பிற்போடப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை பகுதிபகுதியாக இந்த நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதற்குரிய இயந்திர உபகரணங்களும், 5 இற்கு மேற்பட்ட நுளம்புக் கட்டுப்பாட்டு இயக்கத்தினர், கடந்த புதன்கிழமை நெடுந்தீவுக்கு செல்ல வந்தபோது, கடும் கடற்கொந்தழிப்பினால் அள்ளி வீசப்படும் கடல்நீரில் இயந்திரங்கள் நனைந்து பழுதடையும் நிலை ஏற்படலாம் என்ற காரணத்தினால் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, சீரான போக்குவரத்து சேவை இடம்பெறும் வரை இந்தக் கட்டுப்பாட்டு வேலை இடம்பெறுவதில் சாத்தியமற்ற நிலையுள்ளதாக நெடுந்தீவு பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (113)

# அரசாங்க பாடசாலைகளின் புள்ளி விபரங்கள் சேகரிப்பு

(வடமராட்சி)

நாட்டில் உள்ள அரசாங்க பாடசாலைகள் தொடர்பாக கல்வியமைச்சின் புள்ளி விபரப்பிரிவு விபரங்களை சேகரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள் கல்விசார் ஊழியர்கள், பாடசாலை அமைந்துள்ள நிலப்பரப்பு, பௌதீக வளங்கள் என்பன தொடர்பாக விபரங்கள் அடங்கிய பாடசாலை தொகை மதிப்பு விபரத்தை யூன் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக தெரியப்படுத்த வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

யாழ். குடா நாட்டிலுள்ள பாடசாலை அதிபர்களால் முழுமையான விபரங்கள் சேகரிக்கப்பட்டு தொகை மதிப்பீட்டுப் பட்டியல் பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலை தொகை மதிப்பீட்டு பட்டியலை யூன் 25ம் திகதிக்கு முன்பதாக கோட்டக் கல்வி பணிப்பாளர் மூலமாக அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளனர். (17)

## கல்வயலில் சிரமதானப் பணி

(மட்டுவில்)

சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு, கல்வயல் கிராம அலுவலர் பிரிவில் மாபெரும் சிரமதானப் பணி எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. சிரமதானப் பணியில் கல்வயல் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீதிகள் மற்றும் பொது இடங்கள் துப்புரவு செய்யப்படவுள்ளதால், அனைத்துப் பொது அமைப்புக்களையும் பொது மக்களையும் கலந்துகொள்ளுமாறு கல்வயல் கிராம அலுவலர் கோரியுள்ளார்.(24)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



மூன்றாவது அகவையில்



பெயர் : கி. விதுர்ஷியா
முகவரி : பத்தாம் கட்டை, விசுவமடு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# புங்குடுதீவு வைத்தியசாலை மீள இயங்குவதற்கு அனுமதி

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்த புங்குடுதீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலை மீண்டும் இயங்க அனுமதி கிடைத்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் புங்குடுதீவு தென்னிந்தியச் திருச்சபை பொறுப்பாளர் ஏ.ஆர். அம்பலவாணரின் அழைப்பை ஏற்று, புங்குடுதீவுக்கு விஜயம் செய்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மக்களின் குறைகளையும், புங்குடுதீவைச் சேர்ந்த டொக்டர் ஏ.பேரின்பநாதனின் ஆலோசனையையும் கேட்டு, வைத்தியசாலை நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் முயற்சியால் பிரதி சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரத்தின் பணிப்பின் பேரில் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றிய டொக்டர் தா.உமாபதிசிவம் என்பவரை கடந்த முதலாம் திகதி முதல் புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக்கு பொறுப்பாக நியமித்தார்.

தற்போது வெளிநோயாளர் பிரிவு மட்டும் ஆரம்பிக்கப்பட்டாலும், கூடிய விரைவில் மகப்பேற்று பிரிவும், வாட்டில் தங்கும் வசதிகளும், அம்புலன்ஸ் வசதியும், விஸ்தரிக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் புங்குடுதீவு மக்கள் இந்தவைத்தியசாலையை சீரான முறையில் இயங்கவைக்க உதவ வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது மேலதிக விபரங்களை புங்குடுதீவு தென்னிந்தியச் திருச்சபை பொறுப்பாளர் மூலம் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



தியாகிகள் தினத்தை முன்னிட்டு ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்களால் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தபோது எடுக்கப்பட்ட படம்.

## பயிற்சிப் பட்டறை இடமாற்றம்

(ஆழியவளை)

எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை குடத்தனை அ.த.க. பாடசாலையில் நடைபெறவிருந்த தரம் 1-9 வரையிலான மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை அங்கு நடைபெறமாட்டாது எனவும், அன்றையதினம் பயிற்சியாளர் மருந்தங்கேணி இ.த.க.பாடசாலையில் நடைபெறும் எனவும், மருதங்கேணிக் கல்விக் கோட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களும், பாடசாலை அபிவிருத்திச் செயலாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறும் கோட்டக்கல்வி அலுவலர் பா.இரகுநாதன் தெரிவித்துள்ளார். (122)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

(நவிண்டில்)

கம்பர்மலை கலைவாணி சன சமூக நிலையம் நடாத்தும் பாலர் பாடசாலை விளையாட்டு விழாவும், புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி தொடக்கவிழாவும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் சன சமூக நிலைய தலைவர் விவேகானந்தன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. இராசையா பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச செயலாளர் சி.பசுபதி, கரவெட்டி தெற்கு, மேற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சுப்பிரமணியம், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன், வடமராட்சி வலய இணைப்பாளர் சுகாயினிதேவி சமாசத் தலைவர் கே.குணசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (116)

# மக்கள் நலன்புரிசங்க தேசிய பயிற்சிப் பாசறை

மக்கள் நலன்புரி சங்கமும் படையணிகளும் ஏற்பாடு செய்துள்ள யாழ். மாவட்ட தேசியப் பயிற்சி பாசறை நேற்று ஆரம்பமாகி இன்னும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பாசறையின் முதல் நாள் நிகழ்வுகள் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இன்றைய நிகழ்வுகள் யாழ். திருக் குடும்ப கன்னியர் மட மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய பயிற்சி பாசறைக்கான சகல ஏற்பாடுகளினையும் மக்கள் நலன்புரி சங்க பயிற்சி ஆனையாளர் மேற்கொணடுள்ளார். (58)




# உழைத்தால் உயர்வு



என்றுமே முன்னால்

கடின உழைப்பைப் பொறுத்தே உடற் தகுதி அமையும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட்டின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர்களுக்கான உடற்தகுதிப் பயிற்சி முகாம் பெங்களூரில் நடைபெற்று வருகிறது. இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட வீரர்களுக்குப் பந்துவீச்சு குறித்து, விளக்கப் பாடம் நடத்திய கபில்தேவ் கூறுகையில் -

“தற்போதைய காலகட்டத்தில் வீரர்களுக்கு இருக்கும் சுமையை (அதிக போட்டிகள்) குறைக்கவேண்டும் எனில், காயங்களிலிருந்து உடலைப் பாதுபாப்பதும் மிகவும் அவசியம். 100 ஓட்டங்களை எடுப்பதும், 5 விக்கெட்டுகளை வீழ்த்துவதும் முக்கியம் அல்ல.

நீண்டகாலம் விளையாட வேண்டுமெனில, உடற்தகுதியைப் பாதுகாக்கவேண்டும் என்பது மிகமிக அவசியமாகும்” என்றும் கூறினார். இவ்வாறு சுமார் 90 நிமிடங்கள் அறை ஒன்றில் வீரர்களுக்குக் கபில்தேவ் ஆலோசனை வழங்கினார்.

அதன்பின்பு அவர் அளித்த பேட்டியில், பந்துவீச்சுப் பயிற்சியாளர் நியமிப்பது குறித்து, கருத்துத் தெரிவித்த கபில்தேவ் இதுபோன்ற விடயங்கள் குறித்துப் பேசு வதில் தனக்கு விருப்பமில்லை என்று கூறினார்.

இந்திய கிரிக்கெட் அணியில் பந்துவீச்சு ஆலோசகராக கபில்தேவ் இருந்து வருகிறார். இவரது ஆலோசனை சமீபத்தில் நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரில், வீரர்களுக்கு எந்தளவுக்கு உதவியாக இருந்தது என்பது பற்றிய கேள்விக்கு பேட்டியின் போது பதிலளித்த கபில்தேவ் கூறுகையில் - “அது அந்தந்த வீரர்களின் திறமையைப் பொறுத்தது” என்று கூறினார்.

வீரர்களுக்கான உடற் தகுதி பற்றி பேட்டியளித்த கபில்தேவ் - “ஓரிரு நாட்களில் வீரர்களின் உடற்தகுதி பற்றி ஏதும் கூறிவிட முடியாது. சிறந்த உடற்தகுதி பெற வேண்டுமெனில் கடின உழைப்பு மிகவும் அவசியம். கடின உழைப்பைப் பொறுத்தே உடற்தகுதி அவசியம்.

கடினமாக உழைப்பதற்கும், சம்பியனாவதற்கும் குறுக்கு வழி ஏதும் கிடையாது. அதேசமயம் உடற்தகுதி என்பது வீரருக்கு வீரர் மாறுபடும் விடயமாகும்” என்று கூறினார்.

இந்திய அணியின் பந்துவீச்சு ஆலோசகர் பணி பற்றி கூறிய கபில்தேவ், “நான் என்ன கற்றுக்கொண்டேனோ அதைத்தான் நான் வழங்கி வருகிறேன். இதை வீரர்கள் கேட்கத் தயார் என்றால், அதை அவர்களிடமே விட்டு விடுகிறேன். அதை அவர்கள் செயல்படுத்தினால், நன்றாக இருக்கும். எனக்கு நானே கற்றுக்கொண்டதையும், பிறரிடம் நான் கற்றுக்கொண்டதையும் வீரர்களுக்கு தெரிவிக்க வேண்டியது எனது வேலை. அதைக் கேட்டு கடினமாக உழைப்பது வீரர்கள் கையிலுள்ளது” என்று கூறிய கபில்தேவ் காயத்தில் சிக்காமல் இருக்கும் விடயத்தில் வீரர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ☆

# இனியும் ஏமாற்ற முடியாது

**போ**தை மருந்து உபயோகிப்பு விடயத்தில் இனி யாரும் ஏமாற்ற முடியாது என்று சர்வதேச ஒலிம்பிக் சபைத் தலைவர் ஜாக்குஸ் ரோக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஏதென்ஸ் ஒலிப்பிக் போட்டிகள் நடைபெற மூன்று மாதத்துக்கு குறைவான நாட்களே உள்ள நிலையில், போதை மருந்து உபயோகித்து ஏமாற்றுபவர்களுக்கும், அதனை தடுக்கும் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கும் இடையே இருக்கும் இடைவெளி குறைந்து உள்ளது. போதை மருந்து உபயோகிப்பவர்களை கண்டுபிடிப்பதில் இதற்கு முன்பை விட இந்த முறை எளிதாகக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு இருப்பதாகப் போதை மருந்து தடுப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



மரியன் ஜோன்ஸ்
“அன்றும் இன்றும் தூய்மை”

இதற்கு முன்பு கண்டிபிடிக்கப்பட முடியாமல் இருந்த போதை மருந்துகளைக்கூடக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள் ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதுகுறித்து சர்வதேச ஒலிம்பிக் சபைத் தலைவர் ஜாக்குஸ் ரோக் கூறுகையில் - “விளையாட்டுத்துறையை பாதுகாப்பவர்களுக்கும், ஏமாற்ற நினைப்பவர்களுக்கும் இடையே எப்போதும் ஒருவித போராட்டம் இருந்து வருகின்றது. இதில் ஏமாற்ற நினைப்பவர்களே முன்னணியிலிருந்து வந்துள்ளனர். ஆனால், இன்றைய நிலையில் ஏமாற்றுபவர்களை கண்டுபிடிப்பதற்கான அனைத்து பரிசோதனைகளும் எங்களிடம் உள்ளது” என்று கூறினார்.

1968 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், முதன்முறையாகப் போதை மருந்து சோதனையை சர்வதேச ஒலிம்பிக் சபை நடத்தியது.

1984 ஆம் ஆண்டு லொஸ்ஏஞ்சல்ஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அதிகபட்சமாக 12 பேருக்குப் போதை மருந்து சோதனையில் உறுதி செய்யப்பட்டது. சிட்னியில் 4 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 11 பேருக்கு உறுதி செய்யப்பட்டது. 1988 ஆம் ஆண்டு சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் வெற்றி பெற்ற கனடாவின் பென்ஜோன்சன், போதை மருந்து உபயோகித்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவரிடமிருந்து தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது.

பென்ஜோன்சன் மட்டுமன்றி, ஜோகன் மியூலக்கிடம் இருந்து சால்ட் லேக் சிட்டியில் நடைபெற்ற ஒலிம்பிக்கின்போது, 3 தங்கப்பதக்கங்கள் பறிக்கப்பட்டன. மேலும், ரஷ்யாவின் லாரிசா, ஓல்கா டேனிலோவா இருவரும் முறையே தங்கம், வெள்ளிப் பதக்கங்களை இழந்தனர்.

“பிரபல விளையாட்டு வீரர்களைக்கூடத் தகுதி நீக்கம் செய்ய சர்வதேச ஒலிம்பிக் சபை தயங்கியதும் இல்லை. இங்கு இதற்குப் பென்ஜோன்சன் எடுத்துக்காட்டு. கடந்த ஒலிம்பிக்கில்கூட பிரபல தடகள வீரர்களைத் தகுதி நீக்கம் செய்திருந்தோம். எதிர் காலத்திலும் இதே நடவடிக்கை தொடரும். இதில் எந்த சந்தேகமும் இல்லை” என்று ஜாக்குஸ் ரோக் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஒலிம்பிக் விதிகளின்படி, தடைசெய்யப்பட்ட போதை மருந்தை உட்கொண்டால் அதற்கு முழு பொறுப்பும் சம்பந்தப்பட்ட வீரர்களையே சேரும். குற்றச்சாட்டுக்குள்ளானவர்கள் தகுதி நீக்கம் ஆவார்கள். போதை மருந்துத் தடுப்பு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் - நடைபெறவிருக்கும் முதல் ஒலிம்பிக் போட்டி ஏதென்ஸ் ஒலிம்பிக் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் நடைபெறவிருக்கும் எல்லா இறுதிப் போட்டிகளிலும், முதல் 4 இடங்களில் வருபவர்களுக்குப் போதை மருந்துச் சோதனை நடத்தப்படவுள்ளது. பதக்கம் வெல்பவர்கள் அனைவருக்கும் ஈ.பி.ஓ. சோதனை நடத்தப்படும். ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான போதை மருந்துப் பரிசோதனையானது, அடுத்த மாதம் 30 ஆம் திகதி முதல் வரும் ஒகஸ்ட் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. ☆

# இந்திய ஆதிக்கம் சாத்தியமா?

**எ**திர்வரும் பருவத்தில் இந்திய அணியின் ஆதிக்கம் இருக்கும் என்றும், குறிப்பாக அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா அணிகளுக்கு எதிரான தொடர்களில் இந்தியாவின் ஆதிக்கம் இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக இந்திய அணியின் கப்டன் கங்கூலி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்குப் பயிற்சி முகாம் பெங்களூரில் கடந்த வாரம் தொடங்கியது. இந்தப் பயிற்சி முகாமின் இடைவேளையில் இந்திய அணியின் தலைவர் பயிற்சியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது.

“வரும் பருவத்தில் இந்திய அணியின் ஆதிக்கம் நிச்சயம் இருக்கும். ஏனெனில், அணி வீரர்கள் அனைவரும் மிகச் சிறப்பான முறையில் விளையாடி வருகின்ற னர். எனவே, அவுஸ்ரேலியா, தென்னா பிரிக்க அணிகளுக்கு எதிரான தொடரில் நம்முடைய ஆதிக்கம் நிச்சயம் இருக்கும். நம்முடைய ஆதிக்கம் இருக்காது என்பதற்கான காரணம் எதுவும் இருப்பதாக எனக்கு தெரியவில்லை” என்று கூறினார்.

வரும் பருவமானது மிக முக்கியமானது இது குறித்து கங்கூலி கூறுகையில் - “இந்த பருவத்தில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 4 டெஸ்ட் போட்டிகளிலும், தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளோம். அடுத்த ஆண்டும் தொடர்ந்தும் விளையாடவுள்ளோம். எனவே, வரும் பருவமானது மிகப்பெரிய பருவமாகும். இதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும். அதற்காகத்தான் இந்த உடற்தகுதிப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது. கடந்த இரண்டு வருடங்களாக நமது அணி மிகச் சிறப்பாக விளையாடி வருகிறது. இதே நிலையில் தொடர்ந்து முன்னேற வேண்டும். அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களில் பலர் மிகச் சிறப்பாக விளையாடி வருகின்றனர்.

இதே விளையாட்டை அடுத்த 3-4 வருடங்களுக்கு நமது வீரர்கள் தொடருவார்கள் என நம்புகிறேன்” என்று கூறினார்.

கங்கூலி தொடர்ந்து கூறுகையில் - “வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்க கபில்தேவ் அணியுடன் இருப்பது மிகச் சிறந்த விடயமாகும். அவருக்கு இருக்கும் அனுபவமும், சிறப்புத் தன்மையும் வீரர்களுக்கு நிச்சயம் உதவும்” என்று கூறிய கங்கூலி, அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடருக்கு முன்னர் - ஹர்பஜன் முழு உடற் தகுதி பெறவேண்டும் என்ற விடயத்தில் மிகவும் ஆர்வமுடன் இருப்பதாகக் கூறினார்.

“ஹர்பஜன், அனில் கும்ளே இருவரை விட யாராவது சிறப்பாகப் பந்து வீசினால் அவர்களை நிச்சயம் வரவேற்கிறேன். உள்நாட்டில் நடைபெறும் போட்டியில் 2 சுழற் பந்துவீச்சாளருக்கு மேல் அணியில் இடம் பெறுவது நல்லதல்ல. 3 சுழற் பந்துவீச்சாளர்களுடன் விளையாடுவதில் எனக்கு நம்பிக்கை கிடையாது” என்றும் கங்கூலி கூறினார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிற்சி முகாமானது வீரர்கள் முழு உடற் தகுதியைப் பெறவேண்டும் என்பதற்காக நடைபெற்றுக் கொண்டு இருப்பதாகவும், குறிப்பாக சாஹிர் கான், ஆஷிஷ் நெஹ்ரா, அகார்கர், சால்வி ஆகியோரது உடற் தகுதியை வலிமையானதாக மாற்ற நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

தற்போது அணியில் இடம்பெற்றுள்ள இளம் வீரர்கள் குறித்து கங்கூலி கூறுகையில், “அணியில் இளம் வீரர்கள் இடம் பெற்று இருந்தாலும், அவர்கள் அனுபவம் பெற்ற வீரர்களாக உள்ளனர். ஏனெனில் கடந்த 2 வருடங்களாக அணியில் இடம் பெற்றுள்ளனர். வீரேந்திர ஷேவாக், யுவராஜ் சிங், முகமட் கைவ், சாஹிர் கான், இர்பான் பதான், பாலாஜி மற்றும் ஹர்பஜன் ஆகியோர் இளம் வீரர்களாக இருந்தாலும் அனுபவம் பெற்றவர்களாகவுள்ளனர். மேலும் திறமைமிக்கவர்களாகவும் இருக்கின்றனர். இதனால்தான் அணியில் விரைவாக தங்களை நிலை நிறுத்திக்கொண்டுள்ளனர்.

அணியில் நீண்ட நாட்களாக இருக்கும் மூத்த வீரர்களையும், இளம் வீரர்கள் கவனித்து வரவேண்டும் என்பதும் மிக முக்கியமானதாகும்.




சச்சின் - லக்ஸ்மன் “நாவடக்கம் இருந்தால் சாத்தியம்”

ஒருநாள் போட்டிகளில் டிராவிட் தொடர்ந்து விக்கெட் கீப்பராக நீடிப்பார் என்றும், “அணியின் துடுப்பாட்டத்துக்கும், சமநிலைக்கும் டிராவிட் மிக முக்கியாமனவர்.

கடந்த 2 வருடங்களில் ராகுல் டிராவிட் விக்கெட் கீப்பராகச் செயற்பட்டது போல வேறு யாராவது இருந்தால், ஒருநாள் போட்டிகளில் விக்கெட் கீப்பராக வேறு ஒருவர் பற்றி யோசிக்கலாம். ஆனால், தற்சமயம் டிராவிட் மிகச் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகிறார். இந்தநிலை நீடிப்பதுதான் நமக்கு நல்லது” என்று கூறினார்.

ஒருநாள் போட்டிகளில், ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கும் எண்ணம் உண்டா? என்பது குறித்து கருத்து கூறிய கங்கூலி - “ஒருநாள் போட்டியில் என்னையும், சச்சினையும், ஷேவாக்கையும் சுற்றி அமைந்த விடயமாகும். ஆரம்பத்துடுப்பாட்டம் அணிக்கு எது நல்லதோ அதன்படி விடயம் அமையும்” என்று கங்கூலி கூறினார்.

ஷேவாக் மிகச் சிறப்பான முறையில் விளையாடி வருகிறார். அதேசமயம் ஆரம்ப வீரர் களம் இறங்கி விளையாடும் திறமை யுவராஜ் சிங்கிடம் உள்ளது. அவர் ஒரு தரமான வீரர். அவரிடம் இருக்கும் திறமையைப் பார்க்கும்போது, அவரை அணியை விட்டு வெளியே வைக்கமுடியாது. ஆரம்ப வீரராகக் களம் இறங்க யுவராஜ் சிங்கிற்கென இடம் உள்ளது. அவருக்குள் இருக்கும் திறமை, மனவலிமையால் அவரால் சிறப்பாக விளையாட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இந்திய அணிக்காக அவர் பல போட்டிகளில் வெற்றி தேடித் தந்துள்ளார்.

தற்போது யுவராஜ்சிங்கை ஆரம்ப ஆட்டக்காரராகக் களம் இறக்குவதற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது. யுவராஜ் சிறப்பாக விளையாடவில்லை என்றால் இந்த இடத்துக்கு வேறு ஒருவர் பற்றி யோசிக்கப்படும்” என்றார் கங்கூலி. ☆

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# மீண்டும் முருங்கை மரத்தில்

இந்திய அணியின் நட்சத்திரத்துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், ஸ்ரீகாந், அசாருதீன், கங்கூலி போன்றவர்களின் தலைமையின் கீழ் விளையாடி இருந்தாலும், அவருக்கு அதிகம் மன உழைச்சலைக் கொடுத்தது, கங்கூலிதான் என்றால் அதில் மிகையில்லை. அணியின் நலன் என்ற பெயரில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் உட்படப் பல்வேறு விடயங்களில் இது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

இந்த நிலையில் பத்திரிகையாளர்களை அண்மையில் சந்தித்த இந்திய அணித்தலைவர் கங்கூலி "ஜூலையில் இலங்கையில் நடைபெற இருக்கும் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் மாற்றம் செய்யப் போவதாக கூறியிருந்தார். சேவாக் தன்னுடைய பங்கை சிறப்பாக செய்வதாகவும், மற்றைய வீரர் நானோ, டெண்டுல்கரோ என்பதை இந்தப் போட்டியின் சிலதை வைத்துத் தீமானிக்கப்படும் என்றும் கூறியிருந்தமை 'மீண்டும் பழைய குருடி கதவை திறவடி' என்றது போலுள்ளது.

சச்சின் இதுவரை 333 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 13134 ஓட்டங்களை குவித்துள்ளார். இவற்றில் 231 போட்டிகளில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி 10331 ஓட்டங்களை குவித்து சராசரியாக 46.31 இனைப் பெற்றுள்ளார். இதில் 34 சதமும் அடங்கும். 3 ஆவது வீரராக 6 போட்டிகளில் மட்டுமே களமிறங்கி 57 ஓட்டங்களையும், 4 ஆவது வீரராக களமிறங்கி 55 போட்டிகளில் 1838 ஓட்டங்களையும், சராசரியாக 33.41 இனையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரிசை மாற்றம் குறித்து ஒரு சமயம் கருத்துத் தெரிவித்த சச்சின்,

ஆரம்ப வீரராகக் களமிறங்கியே நான் அதிக ஓட்டங்களைப் பெற்றுள்ளேன். என்னால் 4 ஆவது வீரராகச் சோபிக்க முடியவில்லை. இருப்பினும், அணியின் நலன் கருதி நான் ஏற்றுக்கொண்டுள்ளேன். ஆரம்ப ஆட்டக்காரராகக் களமிறங்கினால், பந்து வீச்சாளர்கள் புதியவர்களாக இருப்பர். அத்துடன் பந்தும் புதியதாக இருக்கும். இந்த நிலையில் அதிக ஓட்டங்களைப் பெற முடியும். என்று கூறும் அவர்.

பிற வீரர்கள் சிறப்பாக விளையாடுவதற்கு நாம் வாய்ப்பளிக்க வேண்டும். அதற்காக துடுப்பாட்ட வரிசையை மாற்றி, நான் பின் வரிசையில் விளையாடினால் தான் மற்றவர்கள் பிரகாசிக்க முடியும் என்ற விடயத்தில் உண்மையில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

2002 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ICC சம்பியன் கிண்ணப்போட்டிகளிலும் சச்சினை 4 ஆவது வீரராகவே கங்கூலி விளையாட அனுமதித்தார்.

பொதுவாக ஒவ்வொரு சர்வதேச தொடர் முடிவடைந்ததும், வீரர்கள் தரப்படுத்தல் வரிசையில் சச்சின் முதலாவது இடமாக அல்லது முதல் பத்து இடங்களுக்குள் இருப்பார். ஆனால், இந்த ICC சம்பியன் தொடரில் என்றுமில்லாதவாறு 50 ஆவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டார். இது அவரை மீண்டும் ஆரம்ப வீரராக களம் இறக்க வேண்டியதையே புலப்படுத்தியது.

அதற்குப் பிறகு உலகக்கிண்ணப் போட்டிகளில் மீண்டும் சச்சினை ஆரம்ப வீரராக களம் இறக்கும்போது, பேட்டியளித்த கங்கூலி-

குறிப்பிட்ட நாட்டிற்கெதிராக கடந்த காலத்தில் பெறப்பட்ட பெறுபேறுகளை மையமாக வைத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறியிருந்தார்.

அன்று அவர் சொன்னதை இன்று பார்க்கும்பொழுது, இந்தத் தொடரில் பங்கு கொள்ளும் இலங்கை அணிக்கெதிராகவே சச்சின் அதிக பட்சமாக 7 சதத்தினை பெற்றுள்ளதோடு 2000 இற்கும் மேலான ஓட்டங்களையும் குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் இந்தத் தொடரில் சச்சினை ஆரம்ப வீரராக களமிறக்காதுவிட்டால், அது வியப்பளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.



சச்சின் "மெகாஸ்ரார்"

இதுவரை சச்சின் துடுப்பாட்டத்தில் எந்தவித குறையும் இல்லை. தனது துடுப்பாட்டத்தை நிரூபிப்பதற்கு அவருக்கு இனிமேலும் அவசியமில்லை. அதற்கு ஒருபோதும் அவர் முயன்றதும் இல்லை.

ஏனென்றால் நடந்து முடிந்த உலகக் கிண்ணப்போட்டிகளில் மீண்டும் ஆரம்ப வீரராகக் களமிறங்கி, 11 போட்டிகளில் 673 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தொடர் நாயகன் விருதையும் தட்டிச் சென்றார். அதைத் தொடர்ந்து இந்தியாவில் நடைபெற்ற TVS கிண்ணத் தொடரிலும், 2 சதங்கள், 2 அரைச் சதங்கள் உட்பட 466 ஓட்டங்களை குவித்து அதிலும் ஆட்டத்தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற VB தொடரிலும், பாகிஸ்தான் தொடரிலும், அவரது திறமைக்குப் பங்கமில்லாமலேயே செயற்பட்டுள்ளார்.

இந்த நிலையில், பங்களாதேஷ் தவிர டெஸ்ட் அந்தஸ்து பெற்ற எல்லா நாடுகளுக்கும் எதிராகவும், ஒருநாள் போட்டிகளில் சதம் அடித்த சச்சின் இதுவரை பங்களாதேஷுடன் 6 போட்டிகளில் மாத்திரம் விளையாடியுள்ளார்.

அந்த நாட்டிற்கு எதிராகவும் சதமடித்தால் அவரது சாதனையின் தங்கக் கிரீடத்தில் மேலும் ஒரு வைரக்கல் பதித்தது போன்றதாகும். சச்சின் ஆரம்ப வீரராக வராத பட்சத்தில் இது நிகழவாய்ப்பில்லாமல் போய்விடும். இந்தியக் கிரிக்கெட் சபையும் இந்த மாதம் நடைபெற இருந்த பங்களாதேஷ் சுற்றுப் பயணத்தை ரத்து செய்த நிலையில் அந்தச் சாதனைக்கு இப்போதைக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

சச்சின் சாதனைகள் படைத்தால். அது சச்சினுக்கு மாத்திரமா பெருமை இந்தியாவுக்கும் தானே. அத்துடன், கங்கூலியின் தலைமையின் கீழ் சாதனை படைத்தால் அவருக்குந் தானே.

இதை எல்லாம் கவனத்தில் வைத்து நடைபெற இருக்கும் தொடரில் நல்ல முடிவை எடுப்பாரா கொல்கத்தாவின் இளவரசர்?

~ விமலன் ~

# ஒளிமயமான எதிர்காலத்துக்கு

சிம்பாப்வேயின் கிரிக்கெட் துயரம் எல்லோரும் அறிந்ததே. தற்போது சின்ன ஒரு ஆறுதல். அதாவது 2004 ஆம் ஆண்டுக்கென நிர்ணயிக்கப்பட்ட சகல டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் விலகிக் கொள்வது என்று சிம்பாப்வே அறிவித்துள்ளது. இது ஒரு ஆரோக்கியமானதும், விவேகமானதுமான முடிவாகும் என்பதோடு, புதியதொரு கட்டமைப்புடன் டெஸ்ட் அணியொன்றை உருவாக்கவும் சந்தர்ப்பத்தைக் கொடுக்கும்.

எனவே, வரும் ஒக்டோபர் மாதத்தில் சிம்பாப்வே பாகிஸ்தானுக்கு வரத்தான் போகிறது. அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், அங்கு விளையாடப்போவது ஆறு ஒருநாள் போட்டிகளாக இருக்கும். அத்தோடு இயலுமாயின் முத்தரப்பு ஒரு நாள் தொடராக மாற்ற முடியுமெனின் அதனைச் செய்யலாம் என்று பாகிஸ்தான் விரும்புகின்றது. ஒக்ரோபர் மாதத்தில் தொடர்கள் ஏதுமின்றி இருக்கும் அணிகளைத் தொடர்புகொண்டு மூன்றாவது அணியாக வரமுடியுமா என்று கேட்டிருக்கின்றோம். இது சாதகமாக அமையும் என்றே நம்புகின்றோம் என்கிறார் ரமீஸ்ராஜா.



அக்தர் - இன்சமாம்
"சிம்பாப்வே பாவம்"

இலங்கையுடன் டெஸ்ட் தொடர் ஒன்றில் தோல்வி கண்டபின், அவுஸ்ரேலியா தனது டெஸ்ட் போட்டிகளைச் சிம்பாப்வேயுடன் தவிர்த்துக்கொண்டு ஒரு நாள் போட்டிகளில் மட்டும் ஆடியது. தற்போது பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்துடனான தலா இரண்டு டெஸ்ட் போட்டித் தொடரும் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாடுகளை எல்லாம் ICC யும் சிம்பாப்வேயும் இணைந்தே எடுத்திருக்கின்றன. ஏனைய நாடுகளும் இவற்றை ஆதரித்தே இருக்கின்றன. எனவே, இங்கு சர்ச்சைகள் எதுவும் இல்லை. இப்பொழுது தேவை சிம்பாப்வேக்கு ஆதரவுக் கரங்கள். அந்த ஆதரவுக் கரங்கள் ஆசியாக் கண்டத்திலிருந்து ஆபிரிக்கா நோக்கிச் செல்லும் என்றால் மகிழ்ச்சி தான்.

- நிமலா -

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. உலக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு ஈடாக இப்போது நடக்கும் உதைபந்தாட்டத் தொடர் எது?
02. 2004 ஆம் ஆண்டுக்குரிய டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளைச் சில காலத்துக்குப் பின்போட்டுள்ள நாடு எது?
03. இங்கிலாந்து உதைப்பந்தாட்ட அணியின் தலைவர் பெயர் என்ன?

**விளையாட்டுப் புதிர் - 15**

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ..................................................

முகவரி:- ..................................................

01.

02.

03.

**விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 24.06.2004 முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.**

## விளையாட்டுப் புதிர் இல. 14 இன் விடைகள்

1) ஜங்ஸ்ரார் அணி.
2) ஆறு நாடுகள்.
3) ஆர்ஜென்ரீனா.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 14,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

பரிசு பெற்றவர் றொ.ராஜப்பிரகாஷ்
உயரப்புலம் ஆனைக்கோட்டை.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.021-2227648, 0777166894.

# கைவ்புக்கு இனி இனிக்கும்

டெஸ்ட் அணியில் இடம்பிடிக்க வெகு ஆவலாக உள்ளேன் என்பவர் வேறு யாருமல்ல. இந்தியக் கிரிக்கெட் வீரர் முகமட் கைவ்தான். ஒரு நாள் போட்டி என்று வந்தால் கைவ் அங்கு நிச்சயம் இடம்பெற்றிருப்பார். ஆனால் டெஸ்ட் என்று வரும்போது கைவ் இடம் பெறுவதில்லை. தற்போது யுவராஜ்சிங் டெஸ்ட் அணியில் இடம்பிடித்துள்ள நிலையில் அதுவும் ஆரம்ப வீரனாகவுள்ள நிலையில் கைவ் இப்படிச் சிந்திப்பதில் தவறேதுமில்லை. ஆனால், யுவராஜ் சிங்கிற்கு முன்பதாகவே கைவ் டெஸ்ட் அணியில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதே பல கிரிக்கெட் விமர்சகர்களின் கருத்தாகும். யுவராஜ்சிங், கைவ் இருவரையும் ஒப்பிட்டால், துடுப்பாட்டத்தில் கூடிய நிதானம் நிறைந்தவர் கைவ் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்.



முகமட் கைவ்
"நம்பிக்கை வெல்லும்"

ஆனால், ஒருநாள் போட்டிகளில் ஏழாவது வீரராகக் களமிறங்குவதால் இவர் அதிக எண்ணிக்கையான ஓட்டங்களைக் குவிக்கும் சந்தர்ப்பம் இல்லை. இதனால், உள்ளூர்ப் போட்டிகளில் பங்கு கொள்ளும் போது நிறைய ஓட்டங்களைக் குவித்து தெரிவாளர்களின் கருத்தைக் கவரவேண்டும் என்பது கைவின் எண்ணம்.

அத்தோடு அணித்தலைவர் கங்கூலியும் உதவித் தலைவர் ராகுல் டிராவிட்டும் தமக்கு நிறைய ஆலோசனைகளும், தன்னம்பிக்கையும் தருவதாகக் கைவ் கூறுகிறார். மேலும் இளம் வீரர்களான எங்கள் கருத்துக்களுக்கு மதிப்பளித்து கேட்பது எங்களுக்கு இன்னும் மகிழ்ச்சி என்கிறார்.

இளம் வீரர்கள் இப்படித்தான் கருத்துக்கூறவேண்டும். இல்லாவிட்டால் தமக்கே ஆபத்து என்பது கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தெரியும். ஆனால், டெஸ்ட் ஆட்டத்துக்குத் தகுதியான முகமட் கைவ் இன்னமும் முகிழ்நிலை வீரராக இருப்பதுதான் துயரம். எனறாலும், கிரிக்கெட்டில் திறமை மட்டும் இருந்தால் போதாது. அதிஸ்டமும் இருக்கவேணடும் என்பதும் ஒரு உண்மை. அந்த வகையில் பார்த்தால் இரண்டும் யுவராஜ் சிங்கிற்குச் சேர்ந்தமைய இரண்டில் பின்னது கைவ்வுக்கு சிறிது தொலைவில் இருப்பது போலத் தெரிகின்றது.

என்னவாக இருந்தாலும், பாகிஸ்தானை வென்ற ஜோரில் இந்திய அணித்தலைவர் அணிபற்றியும், துடுப்பாட்ட நிலை பற்றியும் ஏகப்பிரதிநிதியாகக் கருத்துக் கூறுமளவுக்குத் துணிவு பெற்றுவிட்டார். அந்தத் துணிவு அழைக்கலாமா என்றொரு நிலை வரும்போது, முகம்மட் கைப் இயல்பாகவே இந்தியக் கிரிக்கெட் டெஸ்ட் அணியின் ஒரு அங்கத்தவராக் இருப்பார் என்பது நிச்சயம்.

- நிர்மலன் -

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sport

உலக தந்தையர் தினம் இன்று

பூ.நகுலன்

# தந்தையர் நாடெனும் பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஔவையார் வாக்கு. நாம் கண்ணால் காணமுடியாத கடவுளை வணங்குகின்றோம். நேரிலே வந்து அருள்புரியாத ஆண்டவனை தொழுகின்றோம். ஆண்டவனுக்காகப் பல யாகங்களையும், அனுஷ்டானங்களையும் மேற்கொள்கின்றோம். ஆனால், கண்கண்ட தெய்வங்களான அன்னைக்கும், தந்தைக்கும் செய்கின்ற கடமைகள் என்ன என்பதை சிந்தித்துப்பார்ப்பதில்லை.

இந்தவகையில் மனிதர்களின் வாழ்வு நன்றியுணர்வு இல்லாமல் போய்விடக்கூடாது என்பதற்காக, சில தினங்கள் சர்வதேச தினங்களாகக் கொண்டாடப்படுகின்றன. அத்தகைய தினங்களைக் கொண்டாடுவதன் மூலமாக, மனிதவாழ்வில் சில உயரிய பண்புகளை இனங்காண முடிகின்றது.

நான் கருவிலே உருவாவதற்கு தனது வந்தினை அன்னையிடம் சேர்த்த தந்தையினை மதித்து, கௌரவிக்கும் விதமாகத் தந்தையர் தினம் கொண்டாடப்படுகின்றது. இத்தகைய தினம் நமது நாட்டில் கொண்டாடுவதைக் காட்டிலும் மேலை நாட்டவர்களே அதிகம் இந்தத் தினத்தைக் கொண்டாடுவதில் நாட்டம் உடையவர்களாக உள்ளனர்.

மேலை நாட்டவர்களிடம் இருக்கின்ற எத்தனையோ பழக்கவழக்கங்களை நாம் பின்பற்றி வாழ்ந்து வருகின்றோம். இத்தகைய பழக்க வழக்கங்களில் எமது பண்பாட்டுக்குப் பொருத்தமான பழக்கவழக்கங்கள் சிலவென்றே கூற முடிகின்றது. இத்தகைய பழக்கங்களில் நாம் பின்பற்றவேண்டிய ஒரு முக்கியவிடயமாக இந்தத் தந்தையர் தினமும் ஒன்றாக விளங்குகின்றது.

எமது இலட்சியங்களில் தந்தையர் சிறப்பாகவே குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு இலக்கியச் செய்யுளில் தந்தையின் கடமை தொடர்பாக கூறுவதாவது - 'ஒருவனை சான்றோனாக்குவது தந்தையின் முதற் கடமையாக காணப்படுகின்றது' என்றே குறிப்பிடுகின்றது. சான்றோன் என்பதற்கு கல்வி கேள்விகளில் சிறந்தவன் என்ற பொருளும், வீரன் என்ற பொருளும் உரையாசிரியர்களால் கூறப்படுகின்றன. எவ்வாறாயினும் தந்தை நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய கடமை மிகவும் முக்கியமான ஒன்றெனவே புறநானூறு குறிப்பிடுவதைக் காணலாம்.

திருக்குறளில் தந்தையின் கடமை தொடர்பாகக் குறிப்பிடும்போது, தந்தையானவன் தன் மகனுக்கு செய்யவேண்டிய கடமை - அறிஞர் நிறைந்த சபையொன்றில் அந்தச் சபையில் வீற்றிருக்கும் அறிஞர் வரிசையில் முதன்மையான ஒருவனாக இருக்கச் செய்யும் செயலே தந்தையின் கடமையென்று குறிப்பிடுகின்றது.

இதேவேளை தந்தை ஒருவன் தன் மகனுக்கு ஆற்றவேண்டிய செயல்களைப் புரிந்த பின்னர், மகன் தந்தைக்கு ஆற்ற வேண்டியது என்ன என்பதையும் திருக்குறள் குறிப்பிடத் தவறவில்லை.

இவனுடைய தந்தை இவனை மகனாகப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என்று கேட்டுக்கொள்ளும் வகையில், ஒரு மகனானவன் தன்னுடைய தந்தைக்குப் பெயரினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது திருக்குறள்.

புரட்சிக் கவிஞனான பாரதியாரும் தந்தையின் சிறப்பினைக் கூறத்தவறவில்லை. என்னுடைய தந்தையின் நாடு என்று சொல்கின்ற போதில் - புது வித சக்தி பிறப்பிக்கின்றது என்கிறார் பாரதியார். 'தந்தையர் நாடெனும் பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்பது பாரதியார் பாடலாகும்.

தந்தை தன் பிள்ளைகளை வளர்க்கின்றபோது, ஆரம்பத்தில் பிள்ளைக்கு நல்ல ஆசானாக இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும் தந்தை தன்பிள்ளையை சிறந்த பிரஜையாக எதிர்காலத்தில் உருவாக்கிக்கொள்வார்.

ஒரு குறித்த வயதிற்குப் பின்னர் நல்லவொரு தந்தை - தன் மகனுக்கு நல்ல நண்பனாக மாறி விடுகின்றார் என்றே உளவியல் நூல்கள் குறிப்பிடுகின்றன.

தன்னுடைய மகனின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுகின்ற தந்தையால் நாட்டுக்கு நலனே ஏற்படுகின்றது.

விசேட நாட்களில் ஆலயங்கள் சென்று ஆண்டவனைத் தொழுவதைக்காட்டிலும், உயிரோடு உள்ள தந்தை, தாய்க்கு வணக்கம் செலுத்துவதும், அவர்களுக்கு செய்யவேண்டிய உதவிகளை, கடமைகளை நிறைவேற்றலும் வேண்டும்.

விசேட நிகழ்ச்சிகளில் புகைப்படம் எடுக்கவும், வீடியோப் பதிவுக்குமென தந்தையின் கால்களில் வீழ்ந்து வணங்குகின்ற நடைமுறையே தற்போது காணப்படுகின்றது. மற்றைய நேரங்களில் காலில் வீழ்ந்து காலை வாரிவிடுகின்ற தன்மையையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆண்டவனை வழிபடுகின்ற அடியவர்களுக்கு, ஆண்டவனே தந்தை, தாயின் சிறபபை எடுத்து விளக்கியுள்ளார்.

உலகைச்சுற்றி வருகின்ற செயலைக் காட்டிலும், அன்னை தந்தையரைச் சுற்றி வருகின்ற செயலே உயர்ந்தது என்பதற்கு உதாரணமாக - உலகத்தை விடவும் தந்தையும் தாயுமே முதன்மையானவர் என்பதை விநாயகர் மாம்பழம் பெற்ற கதை உணர்த்துகின்றது.

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற வாக்கைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் வெற்றி பெற்றுக்கொள்ள முடியும்.

சில இடங்களில் தந்தை தன் கடமையினைச் செய்யத் தவறுகின்றபோது, அத்தகைய சந்தர்ப்பங்களில் தந்தைக்கே உபதேசம் செய்யலாம் என சமயங்கள் குறிப்பிடுகின்றன. முருகன் பரமசிவனுக்கு உபதேசம் செய்தமையால், சுவாமிநாதர் எனப் பெயர் பெற்றமையை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்ளாமல் தந்தையானவர் தன் கடமைகளைச் செய்யவேண்டியதும், அந்தச் செயல்கள் மூலமாக தம்முடைய தகுதியை உயர்த்திக் கொள்வதும் கடமையாகவுள்ளது.



## தந்தையர் சால்புக்கொரு தந்தையர் தினம்

கல்வாரிப் பயணத்தில் கதறிய தாயர்க்கு
சொல்வார் யேசு சோகிக்க வேண்டாம்!
மிகக்கொடும் நாளிதில் விடலைகட்கே இடர்!
மகப்பேறில்லா மலடர் பாக்கியர்!
இக்கதிக் கான ஈழத்துத் தந்தையர்
துக்கமும் அச்சமும் தோய்ந்த
மனங்களைத்
தம்பிகாள், இந்தத் தந்தையர் தினமே
தெம்புற வைக்குந் திறனுடைத்தாகுக!

எங்கே குண்டால் என்பிள்ளை சிதறுமோ?
எங்கே மறைப்பது? எப்படிக் காப்பது?
இந்த நிமிடமும் இப்பிள்ளை சாகலாம்!
இந்தப் பிள்ளைதன் இச்சைகள் தீர
எப்படி யாகிலும் வாழட்டும் என விட்டு
எப்பிழை செயினும் ஏசா தணைத்துக்
கட்டாக் காலி யாய்ப்பிள்ளை வளர்த்துக்
குட்டிப் பசாசுக ளாய்க்கொலை, கொள்ளை
அட்டகா சம்செய்ய, அருவருத் தூரே
திட்டிடத் தம்மையும், சிந்தை நடுங்கி
முக்கா டிட்டு மூலையில் குந்தி
விக்கித் திருக்கும் வேதனைத் தந்தையர்
உள்ளந் தேறி ஒருவாறு வெளிப்பட
பிள்ளைகாள் புதிய பிறப்பினை எடுப்பீர்,
தந்தையர் தினமெனும் இந்தநன் னாளில்!

சத்தியம் தர்மம் தழைத்திடும் வண்ணம்
இத்தமி ழீழம் எரிபடா தோம்ப
தர்மா வேசம் கொண்டு, சா தழுவிய
கர்ம வீரர்தம் கல்லறை களின்முன்
பெருமிதம் பாதி பிள்ளை இழப்புத்
தருதுயர் பாதியாய்த் தடுமாறு தந்தையர்
எத்தனை யோமக்கள் இறந்திடல் தடுத்த
உத்தமச் சேய்களின் உன்னதம் எண்ணி
வந்தனைக் குரியராய் வானுறல் எண்ணி,
தந்தையர் தினமிதில் தழுவுக சாந்தி!

போர்ப்பயத் தாலே புகலிடம் தேடிப்
பார்ப்பல நாடு பறந்திட மைந்தர்,
பழத்தைச் சுமக்கும் பழமாய் வீட்டுள்
கிழண்டிக் கிடக்கும் தந்தையர் பாவம்!
தந்தையர் தினமாய்ச் சாலுமித் திருநாள்
மைந்தனாத் தாய்மண் வரஎண்ண
வைக்குமா?
தடுக்கிலே தந்தையர் தருநன்றிக் கடனை
கொடுப்பரோ திருப்பிக் கூனிவீழ் வயதில்?

மானம், உணர்ச்சி யுடைபிர மச்சாரி
தானே விடுதலைத் தானைபோய்ச்
சேர்வான்?
மானம் ரோச முடைபிர மச்சாரி
தானே படைகளால் சாய்வான் பிணமாய்?
பிள்ளை குட்டி பெண்டாட்டிப் பாரம்
உள்ளவ னாக்கி ஓ! என் மகனின்
உயிர்க்காப் பேனென ஓடி ஓடி
வயது வராமுன்பே மணத்தில் மாட்டி,
புலபுல, கலகல பேரப் புத்திரர்
நலிந்திடப் பசியால், நாலுகா லில்ஓடித்
துடித்திடும் தந்தையர் துயர்நேரில்
பார்த்துப்
படித்திட, குறுக்குப் பாதை தவிர்த்திட
எதிர்காலத் தந்தையர் என்றாலும்
முன்வரும் விதமாய்த் தந்தையர்
மேன்மைநாள் பேணுவோம்.

ச.வே.பஞ்சாட்சரம்

உலக அகதிகள் தினம் இன்று

# இல்லிடம் என்று அழைக்க ஒரு இடம்

நம் இல்லிடம் என்று அழைக்க நம் எல்லோருக்கும் ஒரு இடம் வேண்டும். (அவ்விடத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய இடம்) ஆனால், உலகம் முழுவதும் உள்ள இலட்சாதிலட்சம் அகதிகளுக்கும், இடம்



பெயர்ந்தோருக்கும் இவ்விடம் தங்களுக்கு எட்டாத தூரத்தில் உள்ளதோடு, கனவிலும் காணமுடியாததாகவே இருக்கிறது. தாம் அணிந்திருக்கும் உடைகளோடு துன்புறுத்தலில் இருந்தும், முரண்பாடுகளில் இருந்தும் தப்பியோடும் அகதி - தான் பழக்கப்பட்ட யாவற்றிலுமிருந்து (தன் குடும்பம், தன் நண்பர்கள், அயலவர்கள் - தன்வீடு, தனது தொழில், சமுதாயம், கலாசாரம்) அந்நியப்படுத்தப்படுகிறான்.

அந்நிய மண்ணிலே நிச்சயமில்லாத வருங்காலத்தை எதிர்நோக்குகிற இவனுக்கு, இழப்புகளின் தாக்கமும், பிரிதலின் ஏக்கமும், அவனை அதிர்ச்சிக்கும், தேற்றமுடியாத மனநிலைக்குள்ளும் தள்ளிவிடும்.

தன் இல்லிடததை இழப்பது என்பது, அவனுடைய பிரத்தியேகமான அடையாளத்தை இழக்கப்பண்ணி விடும். இருந்தும் பாரதூரமான இழப்புகள் மத்தியிலும், அகதிகள் தங்களுடைய இல்லிடத்தையும் அதைச் சார்ந்த உரிமைகளையும் அதனால் வரும் குடும்பப் பந்தங்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைகளையும், பாதுகாப்பையும் அடைய உரித்துடையவர்கள் ஆகின்றார்கள்.

தனிப்பெறுமதி உடையவர்களாவோம் என்றும் எதிர்பார்க்கிறார்கள். அகதிகளின் எதிர்பார்ப்புகள் சிலவேளைகளில் கைகூடாது இருப பினும், நம்பிக்கையற்ற நிலைகளிலும் அவர்கள் தளம்பாத உறுதியோடு இருப்பது நம் எல்லோருக்கும் ஊக்கத்தை அளிக்கிறது.

ஆதலால்தான் ஐக்கியநாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயம், இந்த வருடத்து உலக அகதிகள் தினத்தை (ஆனி 20) 'இல்லிடம் என்று அழைக்க ஒரு இடம்' என்ற கருப்பொருளை எடுத்துள்ளது.

ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தின் ஆணையாளராகிய நான் - உலகிலுள்ள அகதிகளையும், இடம்பெயர்ந்தவர்களையும், தங்களின் இல்லம் என்று அழைககக்கூடிய இல்லிடத்தை அமைக்க எடுக்கும் அவர்களின் உறுதியான முயற்சிகளுக்கு உதவுவதே மிக முக்கியமான கடமை என்று நம்புகிறேன்.

இதே கடமையை நாம் கடந்த 50 வருடகாலத்துக்கு மேலாகச் செய்து வருகிறோம். இதனால் 500 இலட்சத்துக்கு மேற்பட்ட அகதிகள் தங்கள் சிதறிப்போன வாழ்க்கையை மீளமைககவும், புதுப்பிக்கவும் கூடியதையிட்டுப் பெருமையடைகிறேன்.

சில நாடுகள், விசேடமாகத் தொழில் வளமுடைய நாடுகள் - அகதிகளால் நிரம்பியுள்ளன என்ற கூற்றுக்குப் புறம்பாக, 500 இலட்சம் மக்கள் இடப்பெயர்வுகளின் பின்பு தமது அழிக்கப்பட்ட தாய்நாடுகளுக்குத் திரும்பியுள்ளார்கள். அகதிகள் தம் தாய்நாட்டிற்கே திரும்ப அவாவுடையவர்களாக இருக்கிறார்கள். இந்த மனநிலையை நாம் கொசோவோ, கம்போடியா, மொசாம்பிக் போன்ற நாடுகளில் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

இந்த மிலேனியத்தின் ஆரம்பத்தில் அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம் - 1.1 மில்லியன் அகதிகள் - தமது நாடுகளுக்குத் திரும்புவதை அவதானித்துள்ளது. இன்று நாங்கள் கடந்த வருடங்களில் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிய 3.5 மில்லியன் அகதிகளுக்கு உதவி செய்திருக்கிறோம்.

இந்தக் காரணத்தினாலேதான் ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலயம், அகதிகள் சுயமாகச் சொந்த நாடு திரும்புவதை விரும்புகிறது. நாடு திரும்புவதற்கு ஏற்ற சூழ்நிலை ஏற்படும்போது, அகதிகள் தங்கள் நாட்டுக்குத் திரும்புவதே உசிதமான தர்வாகும். கடந்த வருடத்தில் மட்டும் 1.1 மில்லியன் அகதிகள் தம் சொந்த இல்லிடம் திரும்பினார்கள். அதில் ஒரு தனிக் குழுவாக 6,46000 மக்கள் ஆப்கானிஸ்தான் திரும்பினார்கள். இத்தொகையுடன் 2002 ஆம் ஆண்டிலிருந்து, 3 மில்லியன் ஆப்கானிஸ்தர் தம் சொந்த நாடு திரும்பியுள்ளார்கள். இது மட்டுமல்லாமல், பெரிய அளவிலான அகதிகள் அங்கோலா, புறூண்டி, ஈராக், சியாறாலியோன், ருவாண்டா, கோட்டோ டீ லவோயர், பொஸ்னியா, கேசே கொபினா, லைபீரியா, எரித்திரியா, குறோசியா, சோமாலியா, ஆகிய நாடுகளுக்குத் திரும்புவதையும் நாம் காண்கிறோம். இன்னும் பல இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த நாடுகளுக்குத் திரும்புவதை நாம் காண்பது யதார்த்தமாகிறது. ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலயம் 9 ஆபிரிக்க இராட்சியங்களிலிருந்து மீள்குடியேற்றங்களுக்கு ஆயத்தமாவதை இனங்கண்டுள்ளது. இந்த 9 நாடுகளிலும் 2 மில்லியன் மட்டிலான அகதிகளும், பலமில்லியன் உள்நாட்டு இடம் பெயர்ந்தவர்களும் உள்ளனர். ஐ.நா. ஸ்தானிகராலயம் அதன் பல சகோதர ஸ்தாபனங்களுடனும், ஜெனிவாவிலுள்ள பல அரச சார்பற்ற ஸ்தாபனங்களுடனும் சேர்ந்து, இந்த மக்கள் வீடு திரும்பவும், முக்கியமாக அங்கு தங்கி வாழவும் அவர்களுக்குத் தேவையான திட்டங்களை வகுத்துள்ளன. தொடர்ந்தும் சர்வதேச உதவியும் ஆதரவும் கிடைப்பது இந்த முழு முயற்சிகளையும் மீள் குடியமர்த்தல், மீள் இணைத்தல் புனருத்தாரண மீள் கட்டியெழுப்புதல் ஆகிய பணிகள் வெற்றியடைய அத்தியாவசியமாகிறது.

ஆனால், மீண்டும் தம் இல்லம் செல்ல முடியாதவர்களின் நிலை என்ன? இவர்களுக்கு ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலயமும், அவர்கள் சக பங்காளிகளும் இவர்களுக்காக இரண்டு வகையான தீர்வில் ஒன்றை எதிர்பார்க்கின்றார்கள். ஒன்றில் அவர்களுக்கு முதலில் தஞ்சமளித்த நாடுகளில் அவர்களை உள்வாங்கி கொள்வது, அது முடியாவிட்டால் அவர்களை ஒரு மூன்றாம் நாட்டில் குடியமர்த்துவது.

இந்த இரண்டு நிலைகளிலும் முடிவான எதிர்பார்ப்பும், நோக்கமும் இந்த அகதிகள் தமது வாழ்க்கையை ஒரு புது நாட்டில் தொடர்வதே ஆகும். இந்த முடிவுக்கு அடைக்கலம் வழங்கும் நாடுகளின் உண்மையான பெருந்தன்மையிலும், அவர்களுடைய ஏழ்மையிலும் அகதிகளின் சுமைகளை ஏற்றுக் கொள்வதில் காட்டும் தாராள மனப்பான்மையின் தன்மையில் தங்கியுள்ளது.

2003 ஆம் ஆண்டில் 56000 மட்டிலான அகதிகள் 10 பிரதான மீள்குடியேற்ற ஸ்தானங்களில் மீள்குடியேற்றப்பட்டனர். மேலும் 10,000 அகதிகள் - முதல் அகதி அந்தஸ்து வழங்கிய நாடுகளாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டனர். சர்வதேச உதவிகளுக்கு மேலதிகமாக இந்தத் தீர்வு அகதிகள் மட்டிலும், அவர்களுடைய தைரியத்திலும் தங்கியுள்ளது. அவர்கள் தமது புது இல்லங்களில் தம்மைச் சூழநிலைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்வது உகந்ததாகிறது. நாங்கள் எல்லோரும் இந்த நிலையில் அகதிகளுக்குக் கைகொடுத்து, அவர்களின் உண்மையான நிலையை ஏற்றுக்கொண்டு, அவர்கள் சமுதாய வளர்ச்சியில் பெறுமதியான பங்களிப்பு அளிக்கக் கூடியவர்களென்று ஏற்றுக் கொள்கிறோம். அவர்களுக்கும் தம் இல்லம் என்று கூற ஒரு இடம் வேண்டும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தந்தையார் தினமும் மைந்தரின் மனமும்

இன்று ஒரு முக்கிய தினம். சர்வதேச சமூகத்தினரால் அனுஷ்டிக்கப்படுகின்றது. அது உலக தந்தையர் தினமாகும்.

எங்கள் முந்தையர் வாழ்ந்த மண் என தந்தையர் சொன்ன மண்ணில்தான் நாமும் வேரூன்றி, எம் வரலாற்றை நகர்த்துகின்றோம். எங்கள் முந்தையருக்கு அவர்களுக்கு முந்தையோரும், எங்கள் தந்தையர்க்கு அவர்களின் தந்தையோரும் வழிகாட்டிகளாக, ஆசான்களாக, பாதுகாவலராக இன்னும் தெளிவாகக் கூறுவதனால், கண்கண்ட தெய்வங்களாக இருந்தார்கள் என்பதை, எமக்கு பல்வேறு சம்பவங்கள் மற்றும் பதிவுகள் மூலம் வரலாறு உணர்த்திநிற்கிறது.

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பது ஆன்றோர் வாக்கு. இதனைவிடவும் தந்தையர் பெருமையுரைக்க வேறு கருத்துக்கள் தேவையில்லை.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'

'ஆதி - பகவன் முதற்கே உலகு' என்றெல்லாம் புகழப்படும் உயிர் படைப்புக்களின், ஜீவமூலாதார சக்திகளுக்கு நிகராக இந்த உலகில் எதுவுமே கிடையாது என்பதை, எமது முன்னோர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்தறிந்ததன் விளைவாகவே, அவர்கள் தந்தையர் பற்றிக் கூறியவார்த்தைகள் எல்லாம் மகா வாக்கியங்களாகப் போற்றப்படுகின்றன.

எங்கள் மண்... எது எங்கள் தந்தையரும், அவர்களின் முந்தையரும் வாழ்ந்து, உயர்ந்து, உறைந்த மண்ணிது... அதனால்தான் எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே, ஒருசக்தி பிறக்குது மூச்சினிலே என்று மகாகவி பாரதி உணர்ச்சிப் பெருக்குடன் ஓங்கிக் குரலெடுத்துப் பாடியிருக்கிறார்.

தந்தையர் நாடும்.... தாய் மண்ணும், மைந்தரின் ஜீவாதாரம் என்பது மகத்தான உண்மையாகும்.

வள்ளுவன் தன் ஈரடிக்குறளில் பேரழுத்தம் கொடுத்து எழுதினான்.

'தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து
முந்திஇருக்கச் செயல்' என்று ஒரு தந்தையின் மகத்துவமான தன்மை குறித்து எழுதிய அந்த வள்ளுவப் பெரியோன் - ஒரு தந்தையானவன் தனது பிள்ளைகள், வீட்டில் மட்டுமல்ல இந்த உலகத்திலே வல்லவர்களாக, ஆற்றல் அறிவுமிக்கவர்களாக உயரவேண்டும் என்ற உன்னத இலட்சியத்துடன், உயர வழிகாட்டவேண்டும் என்பதை உரைத்துச் சென்றுள்ளான்.

இந்த உலகில் பெரும்பாலான தந்தையர்கள் இந்த நெறியிலிருந்து பிறழ்வது கிடையாது. எங்கோ சொற்பமானவர்கள் சுயசிந்தனைத் தெளிவற்றவர்களாகி, தங்களின் தந்தைத்தனத் தன்மையின் பொறுப்பையும், மகத்துவத்தையும் மறந்து வெறும் வாழ்வு வாழ்பவர்களாக உள்ளனர். அவர்கள் தம் தலைமுறையின் எதிர்காலம் குறித்த அக்கறையற்றவர்களேயாவர். ஒரு தலைமுறையின் உயர்ச்சி அல்லது எழுச்சியென்பது தந்தைவழிப் பாரம்பரியத்தின் ஆளுமையின் வெளிப்பாடாகவே உன்னதம் கொள்கின்றது. இது மரபியல் நெறியின் ஒரு கூறேயன்றி, ஆணாதிக்க சிந்தனையின் பாற்பட்டதொன்றல்ல. தந்தை என்ற தகுதியின் உயிர்ப்பு, தாய் என்ற இன்னொரு உயிர்க் கூறுடன் இணைந்தே ஏற்படுகின்றது என்பதை கருத்தில் கொள்ளல்வேண்டும்.

இன்று தந்தையர்கள் என்ற வர்க்கம் தனயர்களால் உரிய முறையில் உணர்வு நிலையில் கௌரவிக்கப்படுகின்றதா என்ற சந்தேகம் தோன்றுமளவிற்கு இளைஞர் மட்டத்தின் - புதிய தலைமுறையினரிடத்தின் - குணவியல்புகளில், செயற்பாட்டுத் தன்மையில் உளவியல் ரீதியிலான மாற்றம் ஏற்பட்டிருப்பதற்கான காரணம், அது எதுவாக இருந்தாலும் ஆபத்தானதுதான்.

தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்

என்ற வள்ளுவ வாக்கை, புதிய இளைஞர் சமூகம் அதற்கேயுரிய அர்த்த புஷ்டியுடன் உள்வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

- எமது தந்தையரின் ஆளுமை கேலிக்குரியதாகவிருக்கிறது
- எமது தந்தையரின் முதுமை பரிகாசத்துள்ளாகின்றது.
- எமது தந்தையரின் இயலாமை கிண்டலுக்குள்ளாகின்றது
- எமது தந்தையரின் அறிவுரை நிராகரிக்கப்படுகின்றது.

இதற்குக் காரணமான, ஒருவகையான, வக்கிர சிந்தனை எமது இளைஞர் மத்தியில் பரவலாக உருவாகி வருவதற்கான காரணம் ஆராயப்பட்டு, களையப்படுவது அவசியமானதொன்றாகியுள்ளது.

நாம் எமது முந்தையரை, தந்தையரை மதிக்கத்தவறின், கௌரவிக்கத் தவறின் நமது தலைமுறை நம்மை மதிக்காது, கௌரவிக்காது என்பதை இளைய சமூகத்தில் தந்தையரை - அவர்களின் முதுநிலையில், அனுபவநிலையில், அறிவுநிலையில் வைத்துக் கௌரவிக்கத் தயங்குவோர் கருத்திற் கொள்ளவேண்டும்.

இன்றைய தலைமுறையின் மூலவேர் அவர்களின் தந்தையர் தான் என்பதை விழுதுகளாகி, விருட்சமாகி நிற்கும் இளையோர் புரிந்துகொண்டு, அவர்களை மதித்து, கௌரவித்து, மகிழ்விக்கவேண்டிய வரலாற்றுக் கடமையை தவறாது செய்யவேண்டும்...

தந்தையர் மண்ணைக் காப்பதுடன், தந்தையரையும் காப்பது மைந்தர்களின் கடமை என்பதை இந்த நாளில் கூறுவது பொருத்தமானதே.....!

## நாடும் நடப்பும்




செய்தி :- சிஹல உறுமயவினதும், ஜே.வி.பியினதும் நாடாளுமன்ற நுழைவும், அதிகார பலமும் ஜனநாயகத்திற்கும், சமாதான முயற்சிகளுக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலாகும்.

# புனர்வாழ்வு, சமாதான முயற்சிகளுக்கு அவுஸ்ரேலியா 10 மில்லியன் ரூபா நிதியுதவி

இலங்கைக்குப் புனர்வாழ்வு மற்றும் சமாதான முயற்சிகளுக்கு உதவு தொகையாக 10 மில்லியன் அவுஸ்ரேலிய டொலர்களை அவுஸ்ரேலிய அரசாங்கம் வழங்கவுள்ளது. புனர்வாழ்வுக்காக வழங்கப்படும் இந்நிதி உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் வகையிலேயே வழங்கப்படவுள்ளதாகவும், ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட வெளிநாட்டு நிறுவனங்களினூடாகவும் இச்செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியுதவியூடாக இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பியழைப்பதற்கும் அவர்களுக்கான புனர்வாழ்வு உதவிகளை வழங்குவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியகல்வுக்கான சர்வதேச நிறுவனம் எனப்படும் நிறுவனத்தினூடாக சுமார் மூன்று மில்லியன் டொலரும். வடக்கு - கிழக்கின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களின் பொருளாதாரத்தரத்தினை உயர்த்தும் வகையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக சுமார் ஒரு மில்லியன் டொலரும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், சிறுவர்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் வகையில் யுனிசெவ் நிறுவனத்தின் ஊடாக சுமார் ஆறு மில்லியன் டொலரும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை சிறுவர்களின் நலன்களுக்காக வழங்கப்படவுள்ள ஆறு மில்லியன் டொலர் பணத்தொகை வடக்கு கிழக்கிலுள்ள பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகளுக்கும் செலவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க பாடசாலைகளின் புள்ளி விபரங்கள் சேகரிப்பு

நாட்டில் உள்ள அரசாங்கப் பாடசாலைகள் தொடர்பாக கல்வியமைச்சின் புள்ளிவிபரப் பிரிவு விபரங்களைச் சேகரிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள், கல்விசார் ஊழியர்கள், பாடசாலை அமைந்துள்ள நிலப்பரப்பு, பௌதீக வளங்கள் என்பன தொடர்பான விபரங்கள் அடங்கிய பாடசாலைத் தொகை மதிப்பு விபரத்தை யூன் மாதம் முதலாம் திகதிக்கு அமைவாகத் தெரியப்படுத்த வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலை அதிபர்களால் முழுமையான விபரங்கள் சேகரிக்கப்பட்டு தொகை மதிப்பீட்டுப் பட்டியல் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட பாடசாலைத் தொகை மதிப்பீட்டுப் பட்டியலை எதிர்வரும் யூன் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பதாக கோட்டக்கல்வி பணிப்பாளர் மூலமாக அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (17)

# சுயதொழிலுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு 'நீர்ப்' உதவி

யாழ்.மாவட்டத்தில் கிராம அமைப்புக்களூடாக தொழில் முயற்சிகளுக்கான பயிற்சிகளை வழங்கி போதனாசிரியர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை 'நீர்ப்' என்னும் உதவும் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் யாழ்.மாவட்டத்திலுள்ள கிராமமட்ட அமைப்புக்களூடாகத் தையற் பயிற்சிகளை வழங்கி வரும் 13 போதனாசிரியர்களுக்கும் தலா ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிகளை இவ்வமைப்பு முதற்கட்டமாக வழங்கியுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு இளைஞர், யுவதிகளின் மேம்பாடுகளை கவனத்திற் கொண்டு வழங்கப்படும் தொழிற்பயிற்சிகளை மேலும் விருத்தி செய்வதற்காகவே 'நீர்ப்' நிறுவனம் இவ்வுதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (17)

# புனரமைக்கப்படாத வீதியால் போக்குவரத்துக்குச் சிரமம்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியில் அம்பன் பகுதியிலுள்ள மூன்று கிலோமீற்றர் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதால் பயணிகளும், வாகனங்களும் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றன.

குறிப்பாக பருத்தித்துறையில் இருந்து அம்பன் பகுதிக்கு நடைபெற்று வரும் பேரூந்து சேவைகளுக்குப் பெரும் இடையூறு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வல்லிபுரக் கோவில் பகுதியில் இருந்து அம்பன் வரையிலான 7 கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. அம்பன் வைத்தியசாலை வரையிலான 3 கிலோமீற்றர் வீதியே நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. மழைகாலம் தொடங்கினால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்யமுடியாது.

இந்த மூன்று கிலோமீற்றர் நீளமான பகுதியைப் புனரமைத்து உதவுமாறு இந்தப் பகுதிப் பொதுமக்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தொண்டர் நிறுவனங்களிடம் முறையிட்டும் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (122)

# கண்ணிவெடிகளை அகற்றி உதவுமாறு விடுதலைப் புலிகள் கோரிக்கை

மன்னார் மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றி, அந்தப் பகுதிகளில் பொதுமக்கள் மீளக்குடியேறுவதற்கு ஆவன செய்யுமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடமும், இலங்கைப் படையினரிடமும் தமிழீழ விடுதலைப புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மன்னார் மதவாச்சி பிரதான வீதிக்கு அருகிலுள்ள மல்லவராயன் கட்டையடம்பன் பகுதியில் பொது மக்களின் காணிகளில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கு படையினரிடம் மன்னார் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் அனுமதி கேட்டுள்ளார்.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற இலங்கைப் படையினரின் 'எடிபல படை' நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்து, மன்னார் 'ஜீவோதயம்' நலன்புரி முகாமில் தங்கியிருந்த மல்லவராயன் கட்டையடம்பன் பகுதி மக்கள் தற்போதைய சமாதான சூழலையடுத்து தமது பகுதிகளில் மீளக் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியல் கண்ணோட்டம்

கே.ரீ.கணேசலிங்கம்



# 1995 ஆம் ஆண்டு நிலைமையை மீண்டும் கொண்டுவர முயற்சிக்கும் முனைப்புகள் - சமாதானத்தை முறியடிக்கும் இராணுவ அரசியலும் போர்ச் சூழலை உருவாக்கும் இலங்கை அரசாங்கமும்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கத்தின் ஆட்சி ஒரு மாதிரியாக இரண்டு மாதங்களைப் பூர்த்தி செய்துள்ளது. தீர்வு முயற்சிகள் மேலும் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் சமாதான நடைமுறையில் குறிப்பிட்ட எல்லை வீச்சை ஏற்படுத்தியிருந்தது. அதன், ஒரு எல்லை முடிவில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான திட்ட வரைபுகள் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கான ஆரோக்கியமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதற்கு முன்பே ரணில் அரசாங்கம் கலைக்கப்பட்டுவிட்டது. அதன ஆட்சிக் காலம் நிறைவுற முன்பே ஆட்சியைக் கலைத்து, தேர்தல் நடத்தி சந்திரிகாவின் அரசாங்கம் ஆட்சியைப் பிடித்தது. சந்திரிகா அரசாங்கத்தின் ஆட்சியில் சமாதானத்திற்கு ஏற்பட்ட நிலையைப் பற்றி பரிசீலிப்போம்.

இப்போது சந்திரிகா அரசாங்கம் சமாதானத்துக்கான சூழலை மீண்டும் 1995 ஆம் ஆண்டுகளுக்கு பின்னோக்கி நகர்த்திவிட்டது. அக்காலப பகுதியில் காணப்பட்ட நிலைக்கே சமாதானத்தின் போக்கு மாறிவருகின்றது. அதாவது, மீண்டும் சமாதானத்தின் பெயரால் இழுத்தடிப்பையும் ஏமாற்றத்தனத்தையுமே சந்திரிகா அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அவர் மீண்டும் சமாதானத்துக்கான போரின் விழிம்பில் நின்று கொண்டு சமாதானம் பேசுகின்றார். என்றே எண்ணத் தோன்றுகின்றது.

தேர்தல் காலங்களிலும், அதன் பின்பு ஆட்சிப்பீடம் ஏறிய பின்பும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசப்போவதாகவும், இடைக்கால தன்னாட்சி பற்றி பேசவுள்ளதாகவும், கூறி வந்தார். அதனை திரும்பத் திரும்ப சந்திரிகா அரசாங்கம் வலியுறுத்தி வந்தது. வெளிப்படையாக எதனையும் எதிர்க்காது உள்ளார்ந்த நோக்கில் அதனையே இலக்காகக் கொண்டு பணியாற்ற சந்திரிகா ஆரம்பித்திருந்தார். அதாவது தேர்தல் கூட்டணியே இத்தகைய தந்திரத்தை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டதேயாகும்.

ஜனாதிபதியும், அவரது கட்சியும் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய மிக உச்சமான எல்லையைத் தொடுகின்ற செய்திகளை வெளியிட அவரது கூட்டணியின் முக்கியமான ஜே.வி.பி. தீர்வின் ஆரம்ப கட்டத்தைப் பற்றி கருத்து தெரிவிப்பதுடன், கனதியான கண்டனம் ஒன்றையும் வெளியிட்டது. இறுதியில் அரசாங்கத்திலிருந்து விலகப் போவதாக எச்சரிக்கையும் விடுத்துள்ளது. இதனால், ஜனாதிபதி குழம்பி விடுவார் என்பதால் நிலைமை சரிவர வாய்ப்பில்லை என அரசாங்க ஊடகங்கள் கருத்துத் தெரிவித்தன. மொத்தத்தில் சந்திரிகாவுக்கு ஆட்சி முக்கியம், ஆட்சியைப் பிடிப்பதற்காகவே கூட்டுச் சேர்ந்தவர். அரசாங்கத்தை தமது கட்சியே கைப் பற்ற வேண்டுமென்ற எஜமானிய ஜனநாயகத்தை பிரயோகித்தவர். அப்படியாயின் அவருக்கு ஆட்சியே முதன்மையானது. ஆட்சிக்கு முண்டு கொடுக்கும் ஒரு விடயமாகவே சமாதானத்தை அவர் நோக்குகின்றார்.

சமாதானத்துக்கான திகதி பற்றிய முறையான அறிவிப்பு எதுவும் வெளிவரவில்லை. அவ்வாறு அத்தகைய திகதி நிர்ணயமானாலும் 1995ஆம் ஆண்டைப் போல் ஆலோசகர்களையும், அரசாங்கசார்புடைய உத்தியோகத்தவர்களையுமே, பேச்சுவார்த்தைக்கு தயாராக்குவது போல் அவரது அணுகுமுறை காணப்படுகின்றது. அதாவது விடுதலைப புலிகளுடன் பேசுவதற்கு இனப்பிரச்சினை பற்றி முழுமையான வரலாற்றைத் தெரிந்து கொண்டவர்கள் மட்டுமன்றி அனுபவமும் சமாதான வலுவும், நிலைமைக்கு ஏற்ப தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உள்ளவர்களுமே அவசியமாகும். பேச்சுவார்த்தை குழம்புவதற்கு விடயம் மட்டுமன்றி ஈடுபடும் பேச்சாளரின் ஆளுமை, அனுபவம் என்பனவும் முக்கியமானது. அத்தகைய தரத்தையும் விட்டுக் கொடுப்பையும் ஏற்படுத்தக் கூடியவர்களான ஜனாதிபதியோ அவரது அரசாங்கமோ முதன்மைப்படுத்துவதாக தகவல்கள் வெளியாகவில்லை.



அமைச்சுக்கள் தரத்தில் கூட பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துகின்ற அணுகுமுறையை சந்திரிகா குமாரதுங்கா 1995ஆம் ஆண்டுப் பேச்சுக்களிலும் கடைப்பிடிக்கவில்லை. விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், பொருண்மிய மேம்பாட்டுத் துறைப் பொறுப்பாளர் ரவி, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும், டொமினிக் ஆகியோரே அன்றைய பேச்சுக்களில் கலந்து கொண்டவர்கள். அரசாங்கத் தரப்பில் ஜனாதிபதியின் செயலாளரும் ஆலோசகருமான பாலபட்டபெண்டி, ஒஸ்ரின் பெர்ணாண்டோ, லயனல் பெர்ணாண்டோ மற்றும் ராஜன் ஆசீர்வாதம் ஆகியோர் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்களாவார்.

சந்திரிகா குமாரதுங்கா அன்றைய சூழலில் சமாதானத்தின் தூதராகவும், இலங்கையை அழிவிலிருந்து மீட்டெடுக்கும் தேவதையாகவும் காட்டிக் கொண்டு ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றியை பெற்றது மட்டுமன்றி நாடாளுமன்றத்திலும் பலமான நிலையை தக்க வைத்திருந்தார். ஆனால் ஆட்சிப் பீடம் ஏறியதும் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் அதற்கான எந்த தயார்ப்படுத்தலையும் அவர் கொண்டிருக்கவில்லை. மாறாக பேச்சுக்களை சரியாக திட்டமிடாது தீர்மானம் எடுக்கக் கூடியவர்களை நியமிக்காததிலிருந்து எப்படி ஏமாற்றினார் என்பது தெளிவாகிறது. பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் விடுதலைப் புலிகள் தரப்பு முன்வைத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்க முடியாத அரசாங்க பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை மேசையிலிருந்தே ஜனாதிபதியோடு தொடர்பு கொண்டதாகவும், பேச்சுக்களை தற்காலிகமாக நிறுத்திவிட்டு வருமாறு ஜனாதிபதி அழைத்ததாகவும் அறியமுடிகின்றது. அப்படியான தீர்மானம் எடுக்க முடியாத அரசியல் பொறுபபுணர்வற்ற தலைமையோடு மீண்டும் பேச்சுவார்த்தைக் களத்தில் ஜனாதிபதி இறங்குவாராயின் பேச்சுவார்த்தையை ஏமாற்றுகின்ற ஒரு வழிமுறையைக் கடைப்பிடிக்கப் போகிறார் என்பது தெளிவாகும்.

அடுத்து பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்படவேண்டிய அம்சம் தொடர்பாக அரசாங்கம் தெளிவான முடிவெதனையும் கொண்டிருக்கவில்லை. விடுதலைப் புலிகள் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென கோருவதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையை அதனூடாக நிறைவுசெய்ய விரும்புகிறார்கள். ஆறு கட்டப் பேச்சுக்களிலும் முன்வைத்த பிரதான அம்சமான இயல்பு வாழ்க்கைக்கு முதன்மை கொடுப்பது, தமிழ மக்களின் அடிப்படைப் பிரச்சினையில் விடுதலைப் புலிகள் அக்கறையாக உள்ளனர் என்பதை மிகத் தெளிவாகக் காட்டியிருந்தனர். ஆனால் அரசாங்கமோ எந்த இலக்கும் இல்லாமலே பேச்சுக்கள் ஆரம்பத்திலிருந்தே தொடங்கப்பட வேண்டுமெனவும் கூறுகின்றது. மீண்டும் ஆரம்பித்து, ஆறு ஏழு கட்டத்தை அடையும் போது ஆட்சி கலைக்கப்பட்டுவிடும். புதிய பிரதமர், அரசாங்கம் என மாற்றங்கள் தொடங்கிவிடும் அப்போது புதிய அரசுடனும் மீண்டும் முதலிலிருந்து பேச்சை ஆரம்பிப்பதாக அமையும் இதனையே 1956 ஆம் ஆண்டு பண்டா - செல்வா உடன்படிக்கையிலிருந்து இலங்கைத் தமிழரின் அரசியல் வரலாறாக விளங்குகிறது.

அதிலிருந்து எந்த மாற்றத்தையும் தமிழர்களது வாழ்வுரிமை, மனித உரிமை மற்றும் பாதுகாப்புரிமை என்பவற்றில் ஏற்படாதது மட்டுமன்றி தமிழர்களது வாழ்வுரிமையும், பாதுகாப்பும் மனிதாபிமான அணுகுமுறையும், சிங்களப் பெரும்பான்மை அரசுகளால் அவ்வப்போது நிராகரிக்கப்பட்டது. இவ்வாறான போக்குக்குத தயாராகும் சந்திரிகா அரசாங்கம் படிப்படியாக பேச்சுவார்த்தையையும் சமாதானத்தையும் இயல்பான வளர்ச்சிக்குரிய போக்கைத் தடுத்து மீளவும் 1995 ஆம் ஆண்டுக்கு கொண்டு சென்றுவிட்டார்.

சந்திரிகா அரசாங்கத்தின நகர்வுகளில் அடுத்த அம்சமாக அமைந்திருப்பது சமாதானத்துக்கான போர் ஆகும். இது பழைய பதிவுகளை மீள ஆரம்பிப்பது போன்றதாகும். அதனை சற்றுவிரிவாகப் பார்ப்பதே பொருத்தமானதாகும்.

ஆட்சிக்கு வரமுன்பே ஜனாதிபதி அதிகாரத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்ற சந்திரிகா ஆட்சி அமைத்ததுடன் அதனை பூரணமாக நிலைப்படுத்திக் கொண்டார். கிழக்கின் அரசியலை சமாதான மற்றும் போர் நிறுத்தம் என்பனவற்றிலிருந்து விலக்கி போருக்கான அணுகுமுறைகளை அமுல்படுத்த திட்டமிட்டார். விடுதலைப்புலிகளிலிருந்து. விலக்கப்பட்ட தனிநபரான கருணாவை பயன்படுத்திக் கொண்டு கிழக்கின் இயல்பு நிலையை குழப்ப ஆரம்பித்தார். பாதுகாப்பு அமைச்சும், படைகளும், அரசின் புலனாய்வுப் பிரிவும் - கிழக்கை மையப்படுத்தி விடுதலைப் புலிப் போராளிகளையும், தமிழ் ஊடகத்துறையினரையும் தாக்க ஆரம்பித்தனர். கிழக்கின் நிலைமையை முற்றாகக் குழப்பி விடுதலைப் புலிகளை போருக்கு அழைப்பதற்கான அணுகுமுறையையே தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. பல போர்களுக்கு ஆரம்பமாக இருந்த கிழக்கிலங்கையை மீண்டும் போருக்கான ஆரம்ப இடமாக மாற்ற அரசாங்கம் முயன்று வருகிறது. இதற்கு ஏற்ப கிழக்குக்குப் புதிய இராணுவத் தளபதியை நியமித்ததும், மக்களையும், விடுதலைப்புலிகளையும் கையாளும் தந்திரத்தை கொண்ட இராணுவத் தளபதி என அரசாங்கம் அளவீடு செய்து கொண்டு இடமாற்றத்தை சாத்தியப்படுத்தியதும் அரசாங்கத்தின் திட்டமிடல் எதுவென்பது புலனாகியது.



அடுத்து கிழக்கின் இயல்பு நிலைக்கு மாறாக அரசாங்க ஊடகங்களும், அரசுக்கு சார்பான சர்வதேச ஊடகங்களும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொண்டு வரும் பிரசாரங்களை குறிப்பிடலாம். அண்மைய நாட்களில் கிழக்கில் போர் நிகழ்வதாகவும், பாரிய போருக்கான அழிவுகளையும், தாக்கங்களையும் வெளிப்படுத்தும் செய்திகளை ஊடகங்கள் வெளியிடுவதும் அதிர்ச்சியளிக்கும் விடயமாக உள்ளது. கருணா குழுவையும் விடுதலைப புலிகளையும் ஊடகங்களுக்கு ஊடாக மோதவிடும் செயல் அரசாங்கத்தின் எதிர்பார்க்கையை தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறது. ஒருபக்கம் இராணுவம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்திக் கொண்டு அதனை சர்வதேசத்திற்கும், போர் நிறுத்தக் கண்காணிப்பாளருக்கும், அரசாங்கத்தினதும், இராணுவத்தினதும் அணுகுமுறையைக் காட்டிக் கொண்டிருக்க மறுபக்கத்தில் போரை விடுதலைப்புலிகளே நிகழ்த்துவதாக பிரசாரப்படுத்தவே இவ்வணுகுமுறைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. மிகத் தெளிவாக அரசாங்கம் சர்வதேசத்தை ஏமாற்றுகின்றதென உணரமுடிகிறது. இராணுவம் விடுதலைப் புலிகளுடனான சந்திப்பு ஒரு கண்துடைப்பு அரசியல் என்றே கூறலாம். தந்திரமான அரசியல் நகர்வுகளையும், சமாதானமான பேச்சுக்களையும் நிகழ்த்திக் கொண்டு ஆபத்தான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதும், திட்டமிடுவதுமே அரசாங்கத்தின் நோக்கமாகும். இத்தகைய ஆபத்துமிக்க இராணுவ அரசியலைத் தொடர அனுமதிப்பது என்பது மீண்டுமொரு போருக்கு வழி வகுப்பதுடன் விடுதலைப்புலிகள் மீது பழிசுமத்தும் நடைமுறையாகவுமே அமையப்போகின்றது.

கிழக்கு நிலைமை மட்டுமல்ல வடக்கின் சூழலும், முழு இலங்கையின் சூழலும் அவ்வாறானதாகவே அமைந்துள்ளது. அமெரிக்க, இந்திய இராணுவ நிபுணர்கள், வல்லுனர்களை அழைத்து இலங்கை இராணுவத்துக்கு பயிற்சியளிப்பதுடன் அவர்களது உத்திகளை பயன்படுத்தி சமாதான காலத்தில் பலமான இராணுவக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்கி வருகிறது. போப பயிற்சி ஒத்திகை என்பன ஒரு பக்கம் அமையும் போது மறுபக்கத்தில் போருக்கான ஆயுதத் தளபாடங்களைக் கொள்வனவு செய்து வருகின்றது. கடற்படை, விமானப்படை என்பனவற்றைப் பலப்படுத்துவதுடன் ஆட்சேர்ப்பிலும் சமாதான காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் செயற்படுகின்றது.

எனவே ஆட்சிப் பொறுப்பேற்ற சந்திரிகா அரசாங்கம் கடந்த இரண்டு மாதங்களில் சமாதானத்தை நிர்வகிக்கும் நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டார். அவரது தந்திரம் மீண்டுமொரு சமாதானத்துக்கான போரைத் தொடக்குவதேயாகும்.

ஆட்சியுரிமையே சந்திரிகாவின் நோக்கம் என்பதால் ஜே.வி.பி உடன் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக முரண்படுவார் என எதிர்பார்க்க முடியாது. அதனால் சமாதானத்தை முடிவுக்கு கொண்டு வந்தேனும் ஆட்சியை தொடரவும், பல உபாயங்கள் மூலமாகவும் முடிவுக்கு கொண்டுவருவதில் கணிசமான இலக்குகளை அவர் கடந்துள்ளார். இவையனைத்தும் அரசாங்கம் போரைத் தொடங்க விரும்புகிறதென்பதையே காட்டுகின்றது. ஆனால் அதனை விடுதலைப் புலிகள் தொடங்கியதாக உலகத்துக்குக் காட்ட முயல்வதையே அண்மைக்கால நகர்வுகள் உணர்த்துகின்றன.

## கடத்தப்பட்ட அமெரிக்கப் பிரஜை

# கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சவுதி தலைநகரில் சடலமாக மீட்பு



(றியாட்)

சவுதி தலைநகர் றியாட்டில் வைத்து இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட அமெரிக்க நாட்டு பொறியியலாளரான போல் ஜோன்சன் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஜோன்ஸனின் சடலம் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டதனைத் தொடர்ந்து, சவுதிப் படையினர் தலைநகரில் நடத்திய தேடுதலின்போது கடத்தலுடன் தொடர்புடைய சிரேஷ்ட அல்கொய்டா தலைவர் உட்பட நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட அல்கொய்டா அமைப்பின் சிரேஷ்ட தலைவர் அப்துல் அசிஷ் - அல் - மொக்றின் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், அல்கொய்டா அமைப்பின் சிரேஷ்ட தலைவர் சவுதிப் படைகளினால் கொல்லப்பட்டதனை இஸ்லாமிய இணையத்தளம் மறுத்துள்ளது.

போல் ஜோன்ஸன் கொல்லப்பட்டமையை அமெரிக்க அதிபர் புஷ் வன்மையாக கண்டித்துள்ளார்.

அப்துல் அசிஷ் - அல் - மொக்றினுடன் உயிரிழந்த ஏனைய மூவரும் சவுதி அரசாங்கத்தினால் தீவிரமான முறையில் தேடப்பட்டு வந்ததாகவும், இதற்கு காரணம் சவுதித் தலைநகர் றியாட்டில் நடந்த படைகளுக்கெதிரான தாக்குதல்களில் இவர்கள் சம்பந்தப்பட்டிருந்தமையே காரணமெனவும் சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் மீதான தாக்குதலில் இரண்டு சவுதி அதிகாரிகளும் கொல்லப்பட்டதாகவும் குறைந்தது 10 அல்கொய்டா சந்தேக நபர்கள் இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, போல் ஜோன்சனின் தலை துண்டிக்கப்பட்ட உடலையும், தலையையும் இஸ்லாமியத் தீவிரவாதிகள் சாத் அல் ஜிகாத் என்ற இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், பொறியியலாளரான போல் ஜோன்சன் ஏன் கொல்லப்பட்டார் என்ற விளக்கத்தையும் அந்த இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளனர். அந்த விளக்கத்தில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது -

நாம் விதித்த நிபந்தனைகளின் படி சிறையில் உள்ள எமது அமைப்பின் உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படவில்லை நாம் விதித்த காலக்கெடுவும் முடிவடைந்து விட்டது. கொல்லப்பட்ட பொறியியலாளரான போல் ஜோன்சன் சவுதியில் அபாச்சி ரக ஹெலிகொப்டர்களை தயாரித்து வழங்கும் ஒப்பந்தகாரராக பணியாற்றிவந்தார்.

இந்த ஹெலிகொப்டர்களை பயன்படுத்தித்தான் அரபு நாடுகளில் எங்கள் சகோதரர்களையும், ஆதரவாளர்களையும் குண்டு வீசிக் கொன்றனர். எங்கள் முகாம்களை அழிக்கிறார்கள்.

இதனாலேயே இந்த ஹெலிகொப்டர்களை தயாரிக்கும் பொறியியலாளரை கடத்த முடிவுசெய்தோம். போல் ஜோன்சன் மட்டுமல்ல இன்னும் பல அமெரிக்கர்கள் எம்மால் கடத்தப்படுவர் என அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஐரோப்பிய ஒன்றியத்துடன் குரோஷியாவும் இணையவுள்ளது!

ஐரோப்பிய ஒன்றியத்தில் குரோஷியா இணைந்து செயற்படுவது தொடர்பான பேச்சுவார்த்தை அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புருஸ் லெஸ்ஸில் நடந்த இரண்டு நாள் ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டத்திற்கு பின்னர் குரோஷியா என்ற புதிய நாடு ஐரோப்பிய ஒன்றியத்தின் வேட்பாளர் என்பதனை உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படுவதாக ஒன்றியத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குரோஷியா ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து செயற்படவுள்ளமையையிட்டு தாம் திருப்தியடைவதாக ஒன்றியத்தின் தலைவர் ரொமானியோ புறூடி தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டு மே மாதம் பல்கேரியா, ருமேனியா மற்றும் குரோஷியா உட்பட பத்து நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் புதிதாக இணையவுள்ளன. இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை 25 ஆக அதிகரிக்கவுள்ளது.



# பலஸ்தீன காஸா நகர் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல்

பலஸ்தீனத்தின் காஸா நகர் மீது இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸா நகரிலுள்ள பல இடங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இதற்குள் பாவனையில் இல்லாத உலோகத் தொழிற்சாலையும் உள்ளடங்குவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், இந்த தாக்குதல் குறிதது இஸ்ரேல் இராணுவம் எவ்வித தகவலையும் வெளியிடவில்லை.

காஸாவிலுள்ள உலோகத் தொழிற்சாலைகளில் இஸ்லாமிய தீவிரவாதிகள் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களை தயாரிக்கப் பயன்படுத்துவதாகவும், அதனாலேயே இந்த தொழிற்சாலைகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் இஸ்ரேல் தெரிவித்தது.

காஸா நகரத்திலுள்ள பலஸ்தீன நிலைகள்மீது இஸ்ரேல் இராணுவம் அடிக்கடி தாக்குதலை நடத்துவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

இஸ்ரேலிய ஹெலி கொப்ரர்கள் தாக்குதல் நடத்திய பின்னர் காஸாப் பகுதியிலிருந்து இஸ்ரேலின் தென் பகுதி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காஸாப் பகுதியில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் பாரிய சேதமெதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக நோக்கு

# ஆப்கானிஸ்தான் மாகாணமொன்று கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில்

ஆப்கானிஸ்தானிலுள்ள சச்சரான் மாகாணத் தலைநகரை இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் தாக்குதலை மேற்கொண்டு தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும், அந்த மாகாண ஆளுனர் அங்கிருந்து தப்பியோடியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதல் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த தாக்குதலில் அப்துல் சலாம் கான் தலைமையிலான நுற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத் தலைநகரில் இடம்பெற்ற தாக்குதலில் நான்கு பொது மக்கள் கொல்லப்பட்டதாக அந்த மாகாண பிரதி ஆளுனரும், பொலிஸ் அதிகாரியும் பி.பி.ஸிக்கு தெரிவித்தனர்.

அத்துடன், 17 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும் பெருமளவு மக்கள் அச்சம் காரணமாக நகரிலிருந்து வெளியேறி வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

வியாழன் மாலை நடந்த தாக்குதலில் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் றொக்கட், மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை மோசமான முறையில் நடத்தியதாக மாகாணத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். தற்போது குறித்த மாகாணம் கிளர்சித் தலைவர் கானின் கட்டுப்பாட்டில் இருப்பதாக பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.



மாகாணத்தை மீளக் கைப்பற்றும் முயற்சியில் அரசாங்கப் படைகள் தயார்படுத்தலில் ஈடுபட்டுள்ளதாக மாகாண பிரதி ஆளுனர் தெரிவித்தார்.

கிளர்ச்சிக் குழுவின் கடடுப்பாட்டிலுள்ள மாகாணத்தின் வான் பரப்பில் அமெரிக்கப் படையினரின் விமானங்கள் பறந்து திரிவதாக தெரிவிக்கப்படுகிறது.

## செப்ரெம்பர் தாக்குதலுக்குப் பின்னர்

# அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த ஈராக் திட்டமிட்டதாக புடின் தெரிவிப்பு

அமெரிக்காவில் உலக வர்த்தக மையக் கட்டடம் தாக்கப்பட்ட பின்னர் ஈராக்கிய முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததை அமெரிக்காவிற்கு ரஷ்யா எச்சரித்திருந்ததாக ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்தார்.

கஸகஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையிலேயே புடின் மேற்கண்ட தனது கருத்தைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

அமெரிக்கா மீது சதாம் ஹுசைன் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததை ரஷ்ய உளவுத்துறை மூலம் தான் அறிந்துகொண்டதாகவும், அமெரிக்கா மீதும், உலகிலுள்ள அமெரிக்கா சார்ந்த நாடுகள் மீதும் பயங்கரவாதத் தாக்குதலை நடத்த ஈராக் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

ஆனாலும், சதாம் ஹுசைனின் ஏனைய தாக்குதல்களின் பின்னணி குறித்து தான் மேலதிகமாகத் தெரிந்திருக்கவில்லையெனவும் புடின் தெரிவித்தார்.

செப்ரெம்பர் 2001 தாக்குதலின் பின், ஈராக், அமெரிக்கா மீது இராணுவ நடவடிக்கைக்குத் திட்டமிட்டிருந்ததாகவும், இதனை ரஷ்ய உளவுப் பிரிவு பலமுறை அறிந்து அமெரிக்கா தலைமையிலான நாடுகளுக்கு அறிவித்ததாகவும் புடின் தெரிவித்தார்.

இவ்வாறு அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த ஈராக்-அமெரிக்காவின் இராணுவத்தையும், பொது மக்களையும் இலக்கு வைத்ததாகவும் குறிப்பிட்டார்.



சதாம் ஹுசைன் பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபடுவதற்கான தயாரிப்பில் ஈடுபட்டதான தகவலை அறிந்து அதனை நாம் அமெரிக்காவிற்கு வழங்கியிருந்தோம்.

ஆனாலும், பயங்கரவாத நடவடிக்கையில் ஈராக் உட்பட்டதா என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. இரண்டுமே வெவ்வேறான விடயமாகும்.

இதேவேளை, இவ்வாறு தகவல்களை நான் தெரிவிப்பதன் மூலம் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகள் ஈராக்மீது போர்தொடுத்தது தவறு என ரஷ்யா முன்னர் தெரிவித்த நிலைப்பாட்டிலிருந்து எந்தவித மாற்றமும் இல்லை எனப் புடின் தெரிவித்தார்.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் ஈராக்மீது போர் தொடுத்ததை எதிர்த்த ரஷ்யா, தற்போது இவ்வாறான தவகல்களை வெளியிடுவது ஆச்சரியத்தை அளிபபதாகப் பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

# கப்பல் பயணிகளை மீட்க பயிற்சி



பிலிப்பைன்ஸ் நாட்டு கடல்பகுதியில் இப்போது அடிக்கடி கப்பல் விபத்துக்கள் நடக்கின்றன. கப்பல்கள் மோதி மூழ்குவதும் கப்பலில் தீ விபத்து ஏற்படுவதும் புயலில் சிக்கி மூழ்குவதும் அடிக்கடி நடக்கும் சம்பவங்களாகிவிட்டன.

இது போன்ற நேரங்களில் கப்பலையும் அதில் உள்ள பயணிகளையும் எப்படி காப்பாற்றுவதுஎன்று பிலிப்பைன்ஸ் விமானப்படையினர் மணிலா அருகே கூட்டு பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். ஹெலிகாப்டர் மூலமாக பயணிகளை காப்பற்றும் பயிற்சியில் ஒரு வீரர் ஈடுபட்டுள்ள காட்சி.


# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

3.5 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் பிரதான உணவின் மூலமாகக் கடலையே நம்பியுள்ளனர். இன்னும் இருபது வருடங்களில் இந்த எண்ணிக்கை 7 பில்லியனாக இரட்டிக்கும்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிக்கொடி ஏற்றியதற்கு படைத்தரப்பினர் எதிர்ப்பு!

## திருமலை - குச்சவெளியில் சம்பவம்

(திருகோணமலை)

ஊரக தேசிய எழுச்சிப் பேரவையின் குச்சவெளிப் பிரதேச முதலாவது சங்கம நிகழ்வு, நேற்று திருமலை - கும்புறுப்பிட்டி தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது, நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியேற்றப்பட்டு விழா ஆரம்பமாகியது.

எனினும், ஒரு சில மணி நேரத்தின் பின்னர் அந்த வழியாகச் சென்ற கடற்படையினர் - நிகழ்வுக்காக தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டிருந்ததைக் கண்டு, உடனடியாக அந்தப் பிரதேச பொலிஸ் பிரிவிற்கு அறிவித்தல் கொடுத்தனர்.

இதனையடுத்து, நிகழ்வு நடந்த மண்டபத்திற்கு வந்த பொலிஸார், இந்தப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குரியது. எனவே, தமிழீழ தேசியக் கொடியை உடனடியாக கீழே இறக்கவேண்டும் எனக் கூறினர்.

எனினும், இதற்குப் புலிகள் தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்படவில்லை. நிகழ்ச்சி முடிவடைந்த பின்னரே தேசியக்கொடி இறக்கப்படும் எனக் கூறப்பட்டது.

இதனையடுத்து பொலிஸாரும், கடற்படையினரும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட அலுவலகத்திற்குச் சென்று இந்த விடயம் தொடர்பாக முறைப்பாடு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கும்புறுப்புட்டிக்கு விரைந்த போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள், புலிகளிடம் தேசியக்கொடியை இறக்குமாறு கேட்டனர். எனினும், புலிகள் நிகழ்வு முடிவடைந்த மாலை 2 மணியளவிலேயே தேசியக் கொடியைக் கீழே இறக்கினர். (10)

## மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டமும், நடப்பு வருட புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் சங்கத் தலைவர் சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.(58)

## அரசியலமைப்புத் திருத்தம் தோல்வியடையும் நிலையில்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதற்கு எடுத்த முயற்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இன்மையால் தோல்வியடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக, அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வதற்காக அமைக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்காக, ஜனாதிபதி அரசியல் அமைப்புச் சீர்திருத்தக்குழு ஒன்றை நியமித்திருந்தார். இந்தக்குழு அரசிய்ல் அமைப்பில் செய்துகொள்ளவேண்டிய திருத்தங்கள் அடங்கிய யோசனைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தது.

இந்த யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்தை பெறுவதற்கு அரசுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

அரசு ஆட்சிக்கு வந்ததும், அரசியல் அமைப்பில் புதிய திருத்தங்களை கொண்டு வருவதற்கும் குழு சமர்ப்பித்திருந்த விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கு அரசியல் அமைப்பு சீர்திருத்தக்குழு பரிந்துரைத்திருந்தது.

எனினும் இந்த சீர்திருத்த யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதற்கான ஆதரவைப் பெறுவதற்கு அரசுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் இல்லாமல் இருப்பதாக அந்தக்குழு தெரிவித்துள்ளது.

## இன்று வெளியிடப்படும் சிங்கள நூல்கள்!




தமிழீழ விடுதலைப் புலிகளால் - தமிழீழ விடுதலைப் போராட் டம் குறித்து சிங்கள மொழியில் முதன்முறையாக வவுனியாவில் இன்று வெளியிடப்படும் நூல்களின் முகப்புத் தோற்றம்.

### பல்கலைக்கழக நெருக்கடி

## ஆலோசனை நடத்துவதற்கு ஆசிரியர் சங்கம் கூடுகிறது!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நாளை அவசரமாகக் கூடி ஆராயவுள்ளது.

பல்கலைக்கழக சமூகத்தின் ஒரு தொழிற்சங்கம் எதிர்நோக்கும் நெருக்கடிநிலை தொடர்பாக ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாட்டை பல்கலைக்கழக சமூகத்திற்குத் தெரியப்படுத்தவும், ஆசிரியர் சங்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும், இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

இதனால், பல்கலைக்கழக சிரேஷ்ட அவையில் நாளை மதியம் 12 மணிக்கு சகல அங்கத்தவர்களையும் சமூகம் தருமாறு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் அறிவித்துள்ளார்.

### சாதகமான பதில் இல்லையெனில்

## 22 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம்!

### சுகாதார ஊழியர் சங்கம் எச்சரிக்கை

தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அரசு சாதகமான பதில் வழங்கத் தவறின், எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் மீண்டும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் குதிக்கப்போவதாக சுகாதார தொழிற்சங்கங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

சுகாதார ஊழியர்களின் சம்பள முரண்பாடு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார ஊழியர்கள் அண்மைக் காலமாக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

சுகாதார ஊழியர்கள் முன்வைத்துள்ள இந்தக் கோரிக்கைகள் குறித்து அண்மையில் சுகாதார அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டது.

சுகாதார அமைச்சருடனான சந்திப்பில் - தொழிற்சங்கப் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து, விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

எனினும் குறித்த நேரத்தில் எந்த வித சாதகமான பதிலும் வழங்கப்படவில்லை என்றும் தமது கோரிக்கைகள் குறித்து எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நியாயமான தீர்வு வழங்கத் தவறின் சுகாதார அமைச்சின் முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக சுகாதார தொழிற சங்கக் கூட்டமைப்பின் பேச்சாளர் சமன் ரட்ணபிரிய தெரிவித்தார். (01)

### போரைத்...

டுத்துச் செல்லப்படுவதை இராணுவ அதிகாரிகள் சிலர் விரும்பவில்லை.

கருணாவைப் பயன்படுத்தி பொது மக்கள் மத்தியில் பிரிவை ஏற்படுத்திவிட முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால், எமது மக்கள் இப்படிப்பட்ட பொய்ப்பிரசாரங்களை மேற்கொள்ளும் ஊடகங்களை நன்கு இனங்கண்டிருக்கின்றனர். இத்தகைய பிரசாரங்களின், அரசியல் ரீதியான உண்மைத் தன்மையை எமது மக்கள் அறிந்து வருகின்றனர்.

எமது விடுதலைப் போராட்டத்தை வென்றெடுப்பதற்கு அனுபவமிக்க எமது தலைமை இதய சுத்தியுடன் செயற்பட்டு வருகிறது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில், புலிகள் கொலலப்படும் சம்பவங்களுக்கு விரைவில் முடிவு கட்டுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### மூழ்கிய ...

படகிலிருந்தவர்கள் இறந்துள்ளதாகவும், அவர்களில், ஒரு தொகுதி சடலங்கள் நடுக்குடா கடற்கரையில் ஒதுங்கியுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்தபோதிலும், அவ்வாறு ஒரு சடலமும் கரை ஒதுங்கவில்லையென ஸ்தலத்திற்கு சென்று வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்றிரவு 'நமது ஈழநாடு' வுக்குத் தெரிவித்தார்.

### விமானப்படைக்கு...

சீனத்தயாரிப்பு ஜெட் விமானங்கள் முற்றாக அழிந்தன.

இந்த விமானங்களுக்குப் பதிலாக மூன்று புதிய ஜெட் பயிற்சி விமானங்கள் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன.

இப்போது விமானப்படையினரிடம் போதிய விமானங்கள் இல்லை. தற்போது விமானப்படையிடம் உள்ள விமானங்களில் 60 சதவீதமானவை மட்டுமே சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் இருக்கின்றன.

இதனால், பயிற்சி விமானங்கள், போர் விமானங்கள் மற்றும் இரண்டு போக்குவரத்து விமானங்களையும் விமானப்படைக்கு கொள்வனவுசெய்ய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

இந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கென ஏற்கனவே கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இரண்டு மாதங்களுக்குள் புதிய விமானங்களைக் கொள்வனவுசெய்து சேவையில் ஈடுபடுத்த முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மேலும் இரண்டு கிளைமோர்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாம்!

### கொழும்பு பொலிஸ் அதிகாரி கூறுகிறார்

கொழும்பிலுள்ள வீடொன்றில் மேலும் இரண்டு கிளைமோர் கண்ணி வெடிகள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

மறைத்து வைக்கப்பட்டுள்ள இந்த இரண்டு கிளைமோர் கண்ணி வெடிகளும் மிகவும் சக்திவாய்ந்த தாக தாம் கருதுவதாகவும், அவற்றைத் தேடிக்கண்டுபிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் இரண்டு தற்கொலை அங்கிகள் மற்றும் கிளைமோர் குண்டுகள் என்பன கண்டெடுக்கப்பட்ட பின்னர் சிறிசேன ஹேரத் மேற்கண்டவாறு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.(01)

### அகதிகள்...

ளின் ஒன்றியமும் இந்த ஆர்பாட்டப் பேரணிக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இந்த ஆர்பாட்டப் பேரணிக்கு பரந்தன் தேசிய எழுச்சிப்பேரவை நேற்று வெளியிட்ட செ[illegible]க் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாட்டிக்கை செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகி[illegible]ும் இயல்பு நிலை ஏற்படுத்தப்படவில்லை உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தீர்வு காண்பதற்கு அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிழக்கில் தேசப்பற்றாளர்கள் மீதான படுகொலைகள, மலையக மக்கள் மீதான வன்முறைகள் தமிழீழக் கடற்பரப்பில மீனவர்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள், அரசியலில் மாறிமாறி வரும் அரசினால் பொருளாதார உரிமைகள் நிராகரிக்கப்பட்டு வருகின்றமை என்பவற்றை கண்டித்தும்,

விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால தன்னாடசி அதிகாரசபையை வழங்குவதன் மூலமே வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்த முடியும் என்பதை சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் வலியுறுத்தவே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு அந்தச் செய்திக் குறிபபில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நேற்றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

### அமெரிக்க...

கையில் ஆழ்கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

அமெரிககக் கரையோரக் காவலில ஈடுபட்ட இந்தக் கப்பல் சேவையில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் இலங்கை கடற்படைக்கு வழங்குவதற்காக சுமார் ஆறு மில்லியன் டொலர் செலவில் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கடற்படைக் கப்பல் சுமார் இருபது வருடங்கள் பயன்படுத்த முடியும் என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### வெண்புறா....

பின்னால் அரசியல் காரணம் இருப்பதாகக் கூறி ஐக்கிய தேசியக் கட்சி மீது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி குறைகூற முயற்சி செய்கிறது.

ஆனால் புறா உயிரிழந்ததான விசாரணைகள் எவ்வாறு செல்கின்றதென்பது எமக்குத் தெரியுமென ஐதே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

அத்துடன் நான் நம்புகின்றேன் புறா இறந்ததையிட்டு ஐக்கிய தேசியக் கட்சி மீது குறைகூறுவதில் எவ்விதத்திலும் நியாயமில்லையெனத் தெரிவித்தார்.

இதேவேளை புறா உயிரிழந்தது தொடர்பான விசாரணை அறிக்கை மிகக் குறுகிய காலத்தில் கிடைக்குமென நான் எதிர்பார்பதாக பிரிகேடியர் தோரதெனிய தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக போர்க்களத்தில் அனுபவம் வாய்ந்த இராணுவ அதிகாரியிடம் கேட்டதற்கு புறா பறக்காமல் கீழே விழுந்ததையிட்டு நாம் ஒன்றும் செய்யமுடியாது.

தற்போது இராணுவம் மேற்கொண்டு வரும் விசாரணை அறிக்கை விமானப் படையிடம் கையளிக்கப்படும் என மட்டும் அவர் தெரிவித்தார்.

## தடுப்புக் காவலில் இருந்த இலங்கையர் மரணம்

### சோமாலியாவில் சம்பவம்

இலங்கைக் கடற்பரப்பினூடாக சட்டவிரோதமாக இத்தாலி சென்ற வேளை பிடிக்கப்பட்டு சோமாலியாவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சோமாலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர், கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும், உயிரிழந்தவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பது தொடர்பான விபரங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவரின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, சட்டவிரோதமாக இத்தாலி செல்வதற்கு சென்ற பல இலங்கையர்கள் சோமாலியாவில் தங்கியுள்ளனர் என கென்யா மற்றும் நைரோபியிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

### கொழும்பு நகரின்...

கள் நடத்தப்பட்டுவருகிறது.

இப்போது விசாரணைகள் நடத்திவருவதால் இது குறித்து நிச்சயமாக எதையும் கூறமுடியாது.

கொழும்பு மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடைநிறுத்தம் செய்யப்படவில்லை.

பாதாள உலகக்குழுவினர், போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் பயங்கரவாத சந்தேக நபர்களைக் கைதுசெய்ய தொடர்ச்சியான சுற்றிவளைப்புக்கள் நடத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக -

இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இரத்மலானை விமான நிலையம், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்புத் துறைமுகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகிய கேந்திர நிலையங்களில் பாதுகாப்புக்கு மேலதிக பொலிஸார் மற்றும் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.